Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 02 திங்கட்கிழமை (17-12-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:22

## ஆயுதங்களைப் போடுமாறு புலிகளுக்கு நிபந்தனையா?

# அமைச்சர் டிரோனின் கூற்றுக்கு தமிழ்த் தலைவர்கள் கண்டனம்!

## குட்டையைக் குழப்பும் முயற்சி என்றும் சாடல்

கொழும்பு,டிசெம்பர்17

**சமாதானப் பேச்சுக்கு வருவதற்கு முன்னர் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்று புலிகளுக்கு நிபந்தனை விதிக்கும் வகையில் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ வெளியிட்ட கருத்து தமிழ் அரசியல் வட்டாரங்களில் பெரும் எதிர்ப்பையும் விசனத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது.**

**புதிய அரசின் பொறுப்புவாய்ந்த அமைச்சர் ஒருவர் வெளியிட்ட இந்தக் கருத்துக்கு தமிழ் அரசியல் கட்சிப் பிரமுகர்கள் பலரும் கடும் தொனியில் தங்கள் கண்டனத்தை வெளியிட்டிருக்கின்றனர்.**

தனியார் தொலைக்காட்சிச் சேவை ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய பேட்டியிலேயே டிரோன் பெர்னாண்டோ மேற்கண்ட கூற்றை வெளியிட்டிருந்தார்.

இது அரசியல் வட்டாரங்களில் பெரும் சர்ச்சையை உருவாக்கியிருக்கிறது.

நாடு சுமுக நிலைக்கு மீண்டும் திரும்புவதை விரும்பாதவர்களே இப்படி பொறுப்பற்ற முறையில் பேசுகின்றனர். பேரினவாத அரசியல் கட்சிகளுடைய போக்கில் எந்த மாற்றமும் காணப்படவில்லை என்பதையே புதிய அமைச்சரின் கூற்றும் எடுத்துக் காட்டுகிறது என்று அவர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம் கூறியதாவது:-

தமிழ் மக்களுடன் தென்பகுதி மக்களும் நாட்டில் அமைதியையும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## = அமைச்சர் டிரோன் 'குத்துக்கரணம்' =

# புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சு நடத்த அரசு தயாராம்!

### ரூபவாஹினி பேட்டியில் நேற்று அவர் அறிவிப்பு

கொழும்பு,டிசெ.17

விடுதலைப் புலிகளுடன் நிபந்தனைகள் எதுவுமின்றிப் பேச்சு நடத்த புதிய அரசு தயாராக இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்திருக்கிறார்.

பேச்சுக்கு வருவதற்கு முன்னர் புலிகள் தமது ஆயுதங்களைக் கீழே போட்டுவிட வேண்டும் என்று நேற்று முன்தினம் தனியார் தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் அவர் வெளியிட்ட கருத்து அரசியல் வட்டாரங்களில் பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டதை அடுத்து அவர் நேற்று இதனைத் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே வைத்தால் மாத்திரமே அவர்களோடு பேச்சு நடத்த முடியுமென தனியார் தொலைக்காட்சி ஒன்றில் அவர் தெரிவித்ததாக வெளியான செய்தி குறித்து அவர் நேற்று விளக்கமளித்தார். தமது முந்திய கருத்தை அப்போது அவர் மறுத்தார்.

விடுதலைப் புலிகளோடு நிபந்தனையற்ற பேச்சுக்களை நடத்துவதற்கு அரசு தயாராக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

அத்தோடு இனப்பிரச்சினைக்குப் பேச்சு மூலமே தீர்வு காணப்பட வேண்டும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்தியாவின் உதவி பெறப்படும். அடுத்த வாரம் அங்கு செல்லும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பாக விரிவான பேச்சுக்களில் ஈடுபடுவார்.

கடந்த அரசு ஆரம்பித்த நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். நாட்டைப் பிரிக்காமல் புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வைக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பொ.ஐ.மு. நாடாளுமன்றக் குழுக் கூட்டம் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது!

## உட்கட்சிப் பிளவுகள் காரணமா?

கொழும்பு,டிசெ.17

பொ.ஐ.முன்னணி நாடாளுமன்றக் குழுவின் கூட்டம் நேற்று நடைபெறவில்லை. இக்கூட்டம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு ஜனாதிபதியிடம் விடுத்த கோரிக்கையை அடுத்தே கூட்டம் ஒத்திவைக் கப்பட்டது என்று கட்சியின் பிரதிச் செயலாளரான் விஜித் சொய்ஸா தெரிவித்தார்.

ஆனால் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதற்கு கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளே காரணம் என்று அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

ஐ.தே.கவுடன் இணைந்து தேசிய நல்லிணக்க அரசு அமைப்பதை சு.க.வின் ஒரு சாரார் ஆதரிக்கின்றனர். எதிர்க்கட்சித் தலைவராக முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்காவை கட்சித் தலைமைப் பீடம் அறிவித்திருப்பதை ஒரு சிலர் எதிர்க்கின்றனர். இதனால் கட்சி இவ்விரு பிரச்சினைகளிலும் சிக்கியுள்ளது. கட்சியைப் பிளவுபடுத்தும் அளவுக்கு இப்பிரச்சினைகள் வளர்ந்துகொண்டிருப்பதாக அவதானிகள் கருதுகிறார்கள்.

நாடாளுமன்ற குழுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதற்கு ஒரு காரணம் கூறப்பட்டாலும் இவை கூறப்படாத காரணங்களாக இருக்கலாம் என்றே தெரிகிறது. (ஐ)

# சமுர்த்தி அமைச்சுப் பொறுப்பை பிரதமர் முன்னிலையில் ஏற்பேன்!

### இப்படிக் கூறுகிறார் திஸாநாயக்கா



கொழும்பு,டிசெ.17

சமுர்த்தி அமைச்சுப் பொறுப்பை விரைவில் பிரதமர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து ஏற்றுக் கொள்வேன்.

இப்படிக் கூறியிருக்கிறார் கமத்தொழில், கால்நடைத் துறை அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா.

சமுர்த்தி அமைச்சில் இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை எஸ்.பி.திஸாநாயக்காவுக்கு எதிராக இருப்பதாகக் கூறி அவருக்கு சமுர்த்தி அமைச்சுப் பொறுப்பை வழங்க ஜனாதிபதி கடைசி நேரத்தில் மறுத்துவிட்டது தெரிந்ததே.

ஆனால் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை எஸ்.பி.திஸாநாயக்காவுக்கு எதிராக இருந்தது என்ற தகவலை கணக்காய்வாளர் நாயகம் எஸ்.சி.மாயாதுன்ன மறுத்திருக்கிறார்.

எஸ்.பி.திஸாநாயக்காவுக்கு எதிராக எந்தவித அறிக்கையும் இல்லை. ஜனாதிபதி தெரிவித்ததுபோல எந்த அறிக்கையும் இல்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

கணக்கு அறிக்கையில் சில கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன. கூடுதலான விவரங்களைப் பெறுவதற்காக இந்தக் கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. அதனால் அது திஸாநாயக்காவுக்கு எதிரான அறிக்கை என்று கூறிவிட முடியாது என்றும் அவர் சொன்னார். (ஐ-3)

# புனர்வாழ்வு அமைச்சின் பணிகளை அறிவிக்க ஜனாதிபதி பின்னடிப்பு!

## அமைச்சர் ஜயலத் ஆதங்கம்

கொழும்பு,டிசெ.17

புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அமைச்சின்கீழ் வரும் பணிகள் பற்றிய வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி செயலகம் இன்னமும் வெளியிடாமல் இழுத்தடித்துவருகிறது. இதனால் அமைச்சின் பணிகளை முழுமையாக ஆரம்பிக்கமுடியாத நிலையில் இருக்கிறேன்.

புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா இவ்வாறு தெரிவித்தார்.

குடாநாட்டில் எனது அமைச்சின் கீழ்வரும் பணிகளில் - அவை தொடர்பான நிர்வாக விடயங்களில் - மாற்றங்களைச் செய்யவுள்ளேன். ஆயினும் அவற்றை உடனடியாகச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்று அவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாண மீள்குடியமர்வு அதிகார சபை (ரான்), அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களம் போன்றவற்றின் செயற்பாடுகளை மாற்றியமைக்கவிருக்கின்றேன். எனினும் அவற்றை உடன் செய்யமுடியாத நிலையில் இருக்கின்றேன்.



எனது அமைச்சின்கீழ் வரும் திணைக்களங்கள், பணிகள் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் வர்த்தமானி அறிவித்தலை விடுக்க வேண்டும். அந்த வர்த்தமானியை வெளியிடுவதை ஜனாதிபதி செயலகம் இழுத்தடித்துக் கொண்டிருக்கின்றது.

அமைச்சர் பதவி ஏற்றவுடன் ஈ.பி.டி.பி., புளொட் போன்ற அமைப்புகள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பிரதி சபாநாயகர் பதவியை ஏற்பதில்லை என முடிவு!

## பொ.ஐ.முன்னணி நேற்று அறிவிப்பு

கொழும்பு,டிசெ.17

பிரதிச்சபாநாயகர் பதவியை ஏற்பதில்லை என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணி முடிவு செய்துள்ளது.

பிரதிச் சபாநாயகர் பதவியை பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு வழங்கத் தயாராகவிருக்கின்றோம். அதற்காகத் தங்கள் தரப்பில் இருந்து ஒருவரின் பெயரைத் தெரிவு செய்து அனுப்புங்கள் என்று கேட்டு அமைச்சர் கரு ஜெயசூரியா பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குக் கடிதம் எழுத்தியிருந்தார். ஆனால் அந்தப் பதவியை ஏற்க விரும்பவில்லை என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம்.ஜயரத்தின கரு ஜெயசூரியாவுக்கு அறிவித்திருக்கிறார். முன்னணியின் நிறைவேற்றுக் குழுவும் சுதந்திரக்கட்சியின் பொதுக் குழுவும் கூடி இது விடயமாக ஆராய்ந்து இந்த முடிவை எடுத்துள்ளன என்று அவர் தெரிவித்தார். (ஐ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நாட்டில் குற்றச் செயல்களை ஒடுக்க உள்துறை அமைச்சர் திடசங்கற்பம்!

கொழும்பு,டிசெ.17

நாட்டில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள குற்றச் செயல்களை ஒடுக்கப் போகிறேன். அவற்றில் ஈடுபடுவர்கள் சரணடைவதற்கு குறுகிய கால அவகாசம் அளிப்பேன். அதற்குள் சரணடையாதவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு சாட்டையைக் கையில் எடுத்திருக்கிறார் புதிய உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க.

பாதாளஉலகக் கும்பல் மீதும், சில அரசியல்வாதிகள் மீதும் சட்டம் அதன வேலையைச் செய்யும் என்றும் அவர் கூறினார்.

சீனத் தயாரிப்பு ரி-56 ரக துப்பாக்கிகள் பத்தாயிரம், 9மி.மீ. ரிவோலவர்கள் பத்தாயிரம், கணக்கிட முடியாத அளவு கிரனேட்டுகள் ஆகியவை கிரிமினல்களின் கைகளில் உள்ளன. இதைப் பொலீஸார் மதிப்பிட்டிருக்கிறார்கள். இப்படியான சட்ட விரோத ஆயுத பாவனையை விட முடியுமா?

தேர்தல் காலப் பகுதியில் களப் படைத் தலைமையகத்திலிருந்து சுமார் 9மி.மீ. ரிவோல்வர்கள் 300 மாயமாய் மறைந்து விட்டன. அவற்றுக்கு என்ன நடந்தது? ஆயுதங்களைக் கண்டுபிடித்து அறிக்கையுடன் வாருங்கள் என்று ஆள்களை அனுப்பியிருக்கிறேன்.

- இவ்வாறு அமைச்சர் அமரதுங்க சொன்னார். (ஐ)




யாழ்நகர் மைய றோட்டறக்ட் கழகத்தினரால் செல்வராஜா சிந்துஜா எனும் சிறுமிக்கு சிறுநீரக சிகிச்சைக்காக பொதுமக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட ஒரு தொகுதிப் பணம் 03-12-2001 அன்று குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. சிறுமியின் குடும்பத்தினருடன் கழக உறுப்பினர்கள் எடுத்துக்கொண்ட படம் இது. (ஐ)

## கொலைச் சந்தேக நபரை பாதணி காட்டிக்கொடுத்தது!

வவுனியா,டிசெ.17

வவுனியாவில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலீஸ் மோப்பநாய்களின் உதவியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வவுனியா பிறவுண் அன் கம்பனி படைமுகாமில் பாஸ் வழங்கும் பிரிவில் பணியாற்றும் கான்ஸ்டபிள் ஒருவர் கடந்த வியாழனன்று தோணிக்கல் பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்டது தெரிந்ததே.

அந்த இடத்தில் பாதணி ஒன்று காணப்பட்டது. பொலீஸ் மோப்ப நாய் கொண்டுவரப்பட்டு அந்தப் பாதணி முகர்ந்துபார்க்க விடப்பட்டது. பின்னர் மோப்பம் மூலம் அந்த நாய் அடையாளம் காட்டிய நபர் கைது செய்யப்பட்டார். வவுனியா கற்குழிப்பகுதியைச் சேர்ந்த ரகுநாதன் ரமணன் (வயது 23) என்பவரே சந்தேகத்தின் பேரில் பொலீஸாரால் கைது செய்யப்படடார். பொலீஸார் தொடர்ந்தும் விசாரணை நடத்தி வருகின்றார்கள். (ஐ)

# மடவளையில் நடந்த படுகொலைகளின் சூத்திரதாரிகள் நிச்சயம் தண்டிக்கப்படுவர்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் நம்பிக்கை

கண்டி,டிசெ.17

மடவளையைச் சேர்ந்த 10 முஸ்லிம் இளைஞர்களின் படுகொலைகள் குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. இவற்றின் பின்னணியில் இருந்தவர்கள் நிச்சயமாக நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள்.

ஸ்ரீ.ல.மு.கா.தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இவ்வாறு கூறினார். மடவளை ஜும்மா பள்ளி வாசலில் நேற்றுக் காலை இடம்பெற்ற நோன்புப் பெருநாள் தொழுகையின் பின் அங்கு கூடியிருந்த மக்கள் முன்னிலையில் அமைச்சர் பேசினார்.

இறந்தவர்களின் நினைவாக விசேட உபகாரநிதி ஒன்றை ஆரம்பித்திருக்கின்றேன். அந்நிதிக்கு முதலில் பத்து லட்சம் ரூபாவை வழங்குகின்றேன் என்றும் அமைச்சர் சொன்னார்.

அக்குறணையைச் சேர்ந்த வர்த்தகர் முஹம்மது ரஸீன் ஒரு லட்சம் ரூபாவை இந்நிதிக்கு வழங்கினார்.

மடவளை ஜும்மா பள்ளிவாசலில் இடம்பெற்ற விசேட தொழுகையிலும் பிரார்த்தனையிலும் சுமார் 3,000 மக்கள் கலந்துகொண்டனர்.

இறந்தவர்களின் நினைவாக இஸ்லாமிய மத்திய நிலையம் ஒன்றை அமைக்க பிரதேச வாசிகள் முன் வந்துள்ளனர். (ஐ)

# வங்கிச் சேவையை சீராக வழங்க போதிய ஆளணி இன்னும் இல்லை

## மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.17

போதிய ஆளணி இன்மையால் வங்கியின் நாளாந்தக் கருமங்களை வினைத்திறனுடன் ஆற்றுவதில் நாம் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றோம். எனினும் இந்நிலை விரைவில் நிவர்த்தி செய்யப்படும்.

- இவ்வாறு தெரிவித்தார் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் மு.க.சிவபாதவிருதயர்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்.கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளையால் இடம்பெற்ற வாடிக்கையாளர் தின வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வங்கி முகாமையாளர் பேராசேஸ்வரி சிவப்பிரகாசம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது வங்கி பெயரளவில் மட்டும் மக்கள் மனமறிந்த வங்கியாக இல்லாது யதார்த்தத்திலும் அவ்வாறு இருக்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டே இன்றைய வாடிக்கையாளர் தினம் ஒழுங்கு செயப்பட்டது. மக்களுடைய வங்கி என்ற ரீதியில் வாடிக்கையாளர்கள் அனைவரும் தமது எதிர்பார்புகளை எம்முடன் பகிர்ந்து கொள்ளலாம்.

எமது வங்கி இன்றுவரை பூரணமாகக் கணனிமயப்படுத்தப்படாமையினாலும், போதிய ஆளணி இல்லாமையினாலும் சில இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றது. அண்மையில் நியமனம் செய்யப்பட்ட வங்கி அலுவலர்கள் 600 பேரில் எமது கிளைக்கு ஒருவர் மட்டுமே நியமிக்கப்பட்டார்.

விரைவில் நாம் எமது இடர்களைக் களைந்து வினைத்திறனுடனான பூரண சேவையை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவோம்.

பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டு - எமது வங்கிகளில் பணிபுரிந்த - மாணவர்கள் மிகவும் விரைவாகவும் திறமையாகவும் சேவையாற்றியிருந்தார்கள். அவர்கள் மிகவும் பாராட்டுக்குரியவர்கள் - என்றார்.

இந்நிகழ்வில் 'ஜெயஸ்ரீ - 2' பரிசுச் சீட்டெழுப்பில் வெற்றிபெற்ற அதிஷ்டசாலிகளுக்கு பரிசில்களை பிராந்திய முகாமையாளர் வழங்கினார். பல வாடிக்கையாளர்களும் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். (ஐ-9)

## இணுவிலில் நகைக் கடையில் கொள்ளை

யாழ்ப்பாணம்,டிசெ.17

இணுவிலில் பட்டப்பகலில் ஆயுத முனையில் நகைக்கடை ஒன்றில் நகை, பணம் என்பன அபகரிக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்தத் துணிகரக் கொள்ளையில் ஈடுபட்டனர்.

இணுவில் துரைவீதிச் சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள நகைக் கடை ஒன்றுக்குள் புகுந்த இருவரும் ஆயுதத்தைக் காட்டிப் பயமுறுத்திவிட்டு அங்கிருந்து 45 ஆயிரம் ரூபா ரொக்கத்தையும் ஐந்து பவுண் நகையையும் அபகரித்துக்கொண்டு தலைமறைவாகினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலீஸார் இந்தச் சம்பவம் தொடர்பாக ஒருவரைக் கைது செய்துள்ளதாகக் கூறப்பட்டது. (ஐ-3-6)

# கல்மடுவில் புலிகள் தாக்குதல்; இரண்டு படையினர் மரணம்

வவுனியா கல்மடுப் பகுதியில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 2 படையினர் கொல்லப்பட்டனர். மற்றும் ஒருவர் படுகாயமடைந்தனர்.

வவுனியாவிலிருந்து வடமேற்கே 19 கிலோமீற்றர் தொலைவில் கல்மடு காங்கேயன்குளப்பகுதியில் நேற்று முன்தினம் காலை 7.30 மணியளவில இத்தாக்குதல் இடம்பெற்றது.

காயமடைந்தவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

தாக்குதலை அடுத்து அப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. ஒரு சடலமும் சில ஆயுதங்களும் மீட்கப்பட்டன என்று பாதுகாப்பு அமைச்சின் செய்திக் குறிப்புத் தெரிவித்தது. (ஐ)

# புதிய அரசின் கல்வி அமைச்சருக்கு அமைச்சரவை அந்தஸ்து இல்லை!

## கல்வியின் மதிப்பைக் குறைக்கும் செயலா இது?

கொழும்பு,டிசெ.17

புதிய அமைச்சரவையில் கல்வி அமைச்சருக்கு அமைச்சரவை அந்தஸ்து இல்லாதிருப்பது கல்விக்குரிய அந்தஸ்தைக் குறைக்கும் செயலாகும். எனவே கல்வி அமைச்சரை அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சராக்குமாறு வேண்டுகிறோம்.

- இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் தமகாசிவம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கோரியுள்ளார்.

அவர் இது பற்றி மேலும் கூறியதாவது:-

கல்வி அமைச்சருக்கு அந்தஸ்து கொடுக்காமலிருப்பதும், பாடசாலைக் கல்வி, 3 ஆம் நிலைக்கல்வி என இரு திட்ட அமைச்சர்கள் பதவிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதும் குழப்ப நிலையைத் தோற்றுவித்துள்ளது. இதுவரை காலமும் இலங்கை அரசாங்கங்களில் கல்விக்குத் தனியான அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தது. ஆனால் ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு மட்டும் கல்விக்கு முக்கியத்துவம் வழங்காதது ஏன்? எனவே கல்வி அமைச்சரை அமைச்சரவையினுள் கொண்டுவர வேண்டும். - என்று மகாசிவம் கேட்டிருக்கிறார். (ஐ)



யாழ்.குடாநாட்டு விவசாய விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் (சீட்கோ) முதலாவது விதை விநியோக விழா அண்மையில் திருநெல்வேலி விவசாயப் பயிற்சிக் கல்லூரியில் நடத்தப்பட்டது.

முதலாவது விதைத் தொகுதியை யாழ்.மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் க.சின்னத்துரையிடம் இருந்து யாழ்.மாவட்ட கமநல சேவைத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ச.உருத்திரேஸ்வரன் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். அருகில் விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கப் பண்ணைப் பொறுப்பதிகாரி த.சிவலோகநாதனும் காணப்படுகிறார். (ஐ-180)

# இரவுவேளை யாழ். ஆஸ்பத்திரியை ஆக்கிரமிக்கும் தெரு நாய்கள்!

யாழ்ப்பாணம்,டிசெ.17

யாழ்நகரப் பகுதியைச் சூழவுள்ள பகுதிகளில் உள்ள கட்டாக்காலி நாய்கள் இரவு நேரங்களில் யாழ்.போதனா வைத்தியசாலை வளவுக்குள் பிரவேசித்து நோயாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் இடைஞ்சல் ஏற்படுத்தி வருகின்றன.

பகல் நேரங்களில் நகரின் உள்ள உணவுச்சாலைகளைச் சுற்றித்திரியும் இந்தத் தெருநாய்கள், இரவானதும் வைத்தியசாலை வளவுக்குள் பிரவேசிக்கின்றன.

இது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்திற்கு கிடைத்த முறைப்பாட்டை அடுத்து அவற்றை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக வைத்தியசாலைப்பகுதியில் ஓடித்திரிந்த கட்டாக்காலி நாய்கள் கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்னர் இரவு வேளையில் நஞ்சூட்டி அழிக்கப்பட்டன.

எனினும் அஸ்பத்திரியில் கட்டாககாலி நாய்களின் தொல்லை நீடித்தே வருகிறது.

யாழ். மாநகரசபையினரின் உதவியுடனேயே இந்தத்திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியும்.

பகல் நேரங்களில் நகரில் திரியும் கட்டாக்காலி நாய்களை மாநகர சபையினர் முழுமையாக அழித்தால் இந்தத் தொல்லை பெருமளவுக்குக் குறையும் என்றும் தெரிவித்தன.

இதேவேளை -

குடாநாட்டில் கட்டாக்காலி நாய்களால் கடியுண்ட பலர் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளமை வைத்தியசாலை புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. (க-6-15-139)

## மணலாறில் புலிகள் தாக்குதல்

வவுனியா,டிசெ.17

மணலாறு பணிக்கன் வீதிப் பகுதியில் உள்ள படையினரின் முன்னரங்க காவலரண்கள் மீது கடந்த வியாழனன்று தாங்கள் நடத்திய தாக்குதலில் படையினர் ஒருவர் கொல்லப்பட்டார் என்று புலிகள் அறிவித்துள்ளனர்.

ரி-56ரக துப்பாக்கி மற்றும் ரவைகள், குண்டு துளைக்காத கவச உடை ஆகியவற்றையும் தாங்கள் கைப்பற்றியுள்ளதாகப் புலிகள் அறிவித்துள்ளனர். (ஐ)

## கரோல் ஆரம்பம்

குருநகர்ப் பகுதியில் இரவு நேரங்களில் கரோல் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. குருநகர் புனித யாகப்பர் ஆலயம், யாழ்.மரியன்னை பேராலயம் ஆகியவைகளைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் ஆலய பங்குக் குரவர்களுடன் இணைந்து சென்று குருநகரிலுள்ள வீதிகளில் கரோல் ஆராதனைகளை நடத்திவருகின்றனர்.

# குகைகளிலுள்ள அல்கெய்தாவினருடன் வானொலி மூலம் பின்லேடன் தொடர்பு!

வாஷிங்ரன்,டிசெ.17

தோரா போரா மலைக் குகையில் மறைந்துள்ள ஒஸாமா பின்லே




டன், அப்பிரதேசத்தில் உள்ள அல்கெய்தா வீரர்களுக்கு தன்னிடமுளள குறைந்த அலைவரிசை கொண்ட வானொலி மூலம் உத்தரவு விடுவதை தாம் இடைமறித்துக் கேட்டதாக அமெரிக்க இராணுவம் கூறியுள்ளது.

தாம் கேட்டது பின்லேடனின் குரல் தான் என்பது உறுதிப்படுத்தப்பட்டதாகவும் -

ஆகவே பின்லேடன் தற்போது தோரா போரா மலைப் பிராந்தியத்தில் இருப்பது நிச்சயமாகியுள்ளதாகவும் -

அடையாளம் காட்டவிரும்பாத அமெரிக்க இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனால் பின்லேடனின் குரல் எப்படி இனங்காணப்பட்டது என்பதே, அவரது தொலைத்தொடர்பு இடைமறித்துக் கேட்கப்பட்டது பற்றியோ அவர் விளக்கமளிக்க மறுத்துவிட்டார்.

ஆப்கான் வான்பிராந்தியத்தில் பறக்கும் அமெரிக்க உளவு விமானங்கள், செயற்கைக் கோள்கள் ஆகியவற்றின் உதவியுடன் தோரா போராவில் உள்ள அமெரிக்கத் தரைப் படையினர் பின்லேடனின் வானொலி உரையாடலை இடைமறித்துக் கேட்டதாகக் கூறப்படுகிறது. (ஒ)

# பின்லேடனை அடையாளம் காண அமெரிக்கா மரபணு சேகரிப்பு

வாஷிங்டன்,டிசெ.17

இஸ்லாமியத் தீவிரவாதி ஒஸாமா பின்லேடனை அடையாளம் காண அவரது குடும்பத்தவர்களது மரபணுக்களை அமெரிக்கா பெற்றுள்ளது.

ஆப்கான் போரில் பின்லேடன் உடல் சிதறி இறக்கநேரிட்டால், அவரது சடலத்தை அடையளம் காண அவரது குடும்பத்தவர்களது மரபணுக்கள் உபயோகிக்கப்படும்.

பின்லேடன் எங்கு சென்றாலும் அவரைப் போலவே தோற்றமளிக்கும் சிலர் அவரைப் போலவே உடையணிந்து அவரைச் சூழ்ந்து செல்வதாக நம்பத்தகுந்த தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் -

இத்தகைய சூழ்நிலையில் அவர்கள் அனைவரும் குண்டுவீச்சொன்றில் கொல்லப்பட்டால், பின்லேடனின் உடலைத் தனித்து அடையாளம் காண்பது கடினமாகும் என்றும் - அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆகவே மரபணு பரிசோதனை மூலமே பின்லேடனை அடையாளம் காணமுடியும் என்று அமெரிக்கா கருதுவதாகக் கூறப்படுகிறது. (ஒ)



தலிபான்களின் ஆட்சிக் காலத்தில் அவர்களால் சிறை பிடிக்கப்பட்டு கந்தகாரில் அடைத்துவைக்கப்பட்ட வடக்குக் கூட்டணிப் படையினர் நேற்றுமுன்தினம் பழங்குடிசபையினால் வடக்குக் கூட்டணியினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் தமது சொந்த ஊர்களுக்குச் செல்லக் காத்திருக்கும் காட்சி இது.

## ஆப்கானில் அமைதிப்படை

லண்டன்,டிசெ.17

ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக, அங்கு சர்வதேச அமைதிப்படையை நிறுத்தும் பொறுப்பை பிரிட்டன் ஏற்றுக்கொண்டுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி கிறிஸ்மஸ் திருநாளின் முன்னர் அமைதிப் படை வீரர்கள் ஆப்கானில் நிறுத்தப் படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-4)

## அமெரிக்காவில் வழக்குத்தாக்கல்

வாஷிங்டன்,டிசெ.17

கடந்த செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி அமெரிக்காவில் இடம்பெற்ற விமானத் தற்கொலைத் தாக்குதல்களுக்கு காரணமானவர்கள் என்று கருதப்படுபவர்கள்மீது 3 மாதங்கள் கழித்து அமெரிக்க மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப் பட்டுள்ளது.

மொரோக்கோ வம்சாவளியைச் சேர்ந்த பிரெஞ்சுக் குடிமகன் ஜக்கரியா மிசோனி, ஒஸாமா பின்லேடன், அல்மா நலிஜவாகுதி உட்பட பலர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## யூதத் தீவிரவாதிகள் அமெரிக்காவில் கைது!

லொஸ்ஏஞ்சல்ஸ்,டிசெ.17

தீவிரவாத யூத பாதுகாப்பு லீக்கின் தலைவரும், அங்கத்துவர் ஒருவரும் அமெரிக்காவில் கைது செய்யப்பட்டனர்.

லொஸ்ஏஞ்சல்ஸில் உள்ள பிரதான மசூதி மற்றும் கலிபோர்னியா காங்கிரஸ் குடியரசுக் கட்சி உறுப்பினர் ஒருவரின் அலுவலகம் ஆகியவற்றைக் குண்டு வைத்துத் தகர்க்க இவர்கள் இருவரும் சதி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவர்கள் குற்றவாளிகள் என்று காணப்பட்டால் தலா 35 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். (ஒ)

# நாடாளுமன்றத் தாக்குதல் சம்பவம் இந்திய உளவு அமைப்பின் நாடகம்!

## பாகிஸ்தான் அரசு தெரிவிப்பு

இஸ்லாமாபாத்,டிசெ.17

கடந்த வியாழக்கிழமை இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதல் இந்திய உளவு அமைப்புகள் நடித்துக் காட்டிய நாடகம் என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

காஷ்மீர் போராட்டத்தை பயங்கரவாதமாகச் சித்திரித்து, மக்களிடையே அதற்கெதிரான உணர்வலைகளைப் பரப்பவும் -

எதிர்க்கட்சிகள், பத்திரிகையாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் ஆகியோரின் கடும் எதிர்ப்பின் மத்தியில் 'பொடா' என்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டப்பிரேரணையை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும் சூழ்நிலையை உருவாக்கவும் -

இந்திய அரசு தாக்குதல் நாடகத்தை அரங்கேற்றியுள்ளதாக பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

ஆனால் இந்தியா இந்தக் குற்றச்சாட்டை முற்றாக நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி கருத்து வெளியிடுகையில் எந்த ஒரு நாடும் இவ்வளவு கீழ்த்தரமாக நடக்காது என்றார். (ஒ-6)

## ஓசை அரங்கில்

### நாடாளுமன்ற தாக்குதல்: பேராசிரியர் கைது!

புதுடில்லி,டிசெ.17

இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் புதுடில்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவரை இந்தியப் பொலீஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

அப்துல் ரஹ்மான் கிலானி என்ற அந்தப் பேராசிரியர் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் தங்கியிருக்க இடவசதி ஏற்படுத்திக் கொடுத்தாகச் சந்தேகிக்கப்படுவதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (ஒ)

### உகண்டாவில் எண்ணெய்த்தாங்கி வெடித்து 70 பேர் பலி!

நைரோபி,டிசெ.17

உகண்டாவில் கடந்தவாரம் எண்ணெய்த்தாங்கி ஒன்று வெடித்துத் தீப்பற்றியதில் 70 பேர் உயிரிழந்தனர். எண்ணெய் பெற்றுக்கொள்வதற்காக எண்ணெய்த்தாங்கியைச் சுற்றி நின்றவர்களே தாங்கி வெடித்ததில் இறந்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப் பட்டவர்களில் 40 பேர் வரை ஆபத்தான நிலையில் உள்ளனர். (ஒ)

## சிலநாடுகளில் தடை செய்யப்பட்ட

# காஷ்மீர்த் தீவிரவாத அமைப்புகள் பெயர்களை மாற்றிக் கொண்டன

இஸ்லாமாபாத்,டிசெ.17

காஸ்மீர் தீவிரவாத அமைப்புகள இரண்டு தமது பெயரை மாற்றிக் கொண்டுள்ளதாக பாகிஸ்தானிய நாளேடான 'டொன்' செய்தி வெளியிட்டுள்ளது.

ஜெய்சி முஹமட் என்ற அமைப்பு அல் சொர்கா என்றும் -

லஸ்கர் இ தொய்பா என்ற தீவிரவாத குழு, பஸ்மான் இ அஸ்லோ என்றும் -

தமது பெயரை மாற்றிக் கொண்டுள்ளன.

இந்திய நாடாளுமன்றத் தாக்குதலில் தொடர்புடையவை என்று இந்திய அரசால் குற்றஞ்சாட்டப்படும் இந்த இரு அமைப்புக்களின் முன்னைய பெயர்களை சிலநாடுகள் தடைசெய்துள்ள தீவிரவாத அமைப்புக்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

காஷ்மீரில் தீவிரவாத அமைப்புக்களின் ஒருங்கிணைப்பு மைய நிறுவனமான முகைதா ஜிகாத்தின் பட்டியலில் இந்த அமைப்புக்களின் புதிய பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த தகவல்களை 'டொன்' நாளேடு தெரிவித்துள்ளது. (ஒ-6)

# பலஸ்தீன நாடு உருவாகும்வரை மேற்காசியாவில் அமைதிகிட்டாது.

## இப்படிக் கூறுகிறார் பாப்பரசர்

வத்திகான் சிட்டி,டிசெ.17



ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பகுதிகளில் இருந்து இஸ்ரேலியப்படைகள் வெளியேறி பலஸ்தீனத் தனிநாடு ஒன்று உருவாகும் வரை இஸ்ரேலியருக்கும், பலஸ்தீனியருக்கும் இடையே ஒருபோதும் சமாதானம் உருவாகாது.

இவ்வாறு பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் கூறினார்.

வத்திக்கானில் நடத்த மத்திய கிழக்குக் கத்தோலிக்க மதத் தலைவர்களின் மாநாட்டில் தலைமைதாங்கி உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இரண்டு வித்தியாசமான தீவிரவாதங்களினால் மக்கள் நசுக்கப்படுவதாகவும் -

இதனால் யேசுபிரான் பிறந்த புனித பூமியின் முகம் நசுக்கப்படுவதாகவும் -

பாப்பரசர் கவலை தெரிவித்தார்.

இஸ்ரேலின் பாதுகாப்பு, பலஸ்தீன மக்களுக்கு தனிநாடு உருவாக்கப்படுதல், இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் பகுதிகளுக்கு விடுதலை, ஜெருஸலேம் புனித பூமிக்கு விசேட அந்தஸ்தளிக்க சர்வதேச உத்தரவாதம், பலஸ்தீன அகதிகள் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஆகியவை மேற்காசியவில் அமைதி நிலவுவதற்கு அடிப்படை அம்சங்கள் என்று வத்திகான் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# ரமல்லாவிலிருந்து வெளியேற யஸீர் அரபாத்துக்குத் தடை!

ஜெருஸலேம்,டிசெ.17



மேற்குக்கரை நகரான ரமல்லாவிலிருந்து வெளியேற பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்துக்கு இஸ்ரேல் அதிகாரபூர்வமற்ற தடை விதித்துள்ளது.

அரபாத்துடனான தொடர்புகளைத் துண்டிப்பது என இஸ்ரேல் அரசு முடிவு செய்ததன் பின்னரே இந்தத் தடை விதிக்கப்பட்டது.

இதுதொடர்பாக இஸ்ரேலிய நீதியமைச்சர் மீஷிட்ரிட் கூறுகையில், 'பலஸ்தீனத் தலைவர் அரபாத்தை தனிப்பட்ட முறையில் தாக்கப்போவதில்லை, ஆனால், அவர் இருக்கும் இடத்திலேயே தொடர்ந்து இருக்கவேண்டும்' என்று வலியுறுததினார்.

பலஸ்தீன அதிகாரசபைக்குத் தீங்கிழைப்பதோ, யஸர் அரபாத்தை நாடு கடத்துவதோ இஸ்ரேலின் நோக்கமல்ல என்றும் அவர் மேலும் கூறினார்.

இஸ்ரேலியப் பகுதிகளில் இடம்பெறும் தற்கொலைத் தாக்குதல்களுக்குப் பதிலடியாகவே, அரபாத் வெளியிடங்களுக்குச் செல்வதை இஸ்ரேல் தடுத்திருப்பதாகக் கருதப்படுகிறது. (ஒ)

## இஸ்ரேலுக்கு சாதகமற்ற

# ஐ.நா.பாதுகாப்புசபை தீர்மானம் அமெரிக்க 'வீட்டோ'வால் ரத்து!

நியூயோர்க்,டிசெ.17

மேற்காசியாவில் அமைதியை ஏற்படுத்தும் நடவடிக்கையாக மேற்குக் கரை மற்றும் காஸா பிரதேசங்களில் கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படவேண்டும் என்ற ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை அமெரிக்கா தனது 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுத்துவிட்டது.

இஸ்ரேலை அரசியல் ரீதியாக தனிமைப்படுத்துவதற்காக பலஸ்தீன ஆதரவுடன் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதாக ஐநாவிற்கான அமெரிக்கத் தூதர் தெரிவித்தார்.

இஸ்ரேலியப் படைகள் காஸா பகுதியில் தேசிவ் நகருக்குள் நுழைந்து பலஸ்தீன பொலீஸார் ஒருவரை கொன்று மேலும் நால்வரைக் காயப்படுத்தியதைத் தொடர்ந்து ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

இதற்கிடையில், மேற்காசியாவில் அமைதிப் பேச்சில் ஈடுபட்டுள்ள தனது சிறப்புத் தூதர் அன்ரனி ஜின்னியை அமெரிக்கா திருப்பி அழைத்துள்ளது. இவரைத் திருப்பி அழைத்தது பேச்சைத் தொடருவது குறித்து ஆலோசிக்கவே என்று அமெரிக்க அரசின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ஒ-6)

# 'பலஸ்ரிக்' ஒப்பந்தத்தின் மாற்றை ஏற்படுத்த ரஷ்யா நடவடிக்கை

மொஸ்கோ,டிசெ.17

அமெரிக்காவால் கைவிடப்படும் 'பலஸ்டிக்' ஏவுகணைத் தடை ஒப்பந்தத்திற்கு மாற்றாக வேறு ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்த ரஷ்யா முயன்று வருவதாக ரஷ்ய வெளியுறவு அமைச்சர் இக்கோர் இவானோவ் தெரிவித்தார்.

அமெரிக்காவின் நடவடிக்கை ஒரு தலைபட்சமானது என்றும் -

பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை பரவாமல் தடுக்கும் சட்ட அடிப்படையை மட்டுமன்றி ஆயுதக் கட்டுப்பாட்டு முறையையும் அமெரிக்கா குலைத்துவிட்டதாகவும் -

அவர் குற்றஞ்சாட்டினார்.

ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பாக புதிய கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவது பற்றி அமெரிக்காவுடன் ரஷ்யா தொடர்ந்து பேசும் என்றும் இவானோவ் மேலும் தெரிவித்தார்.

பேரழிவு ஆயுதங்களை கட்டுப்படுத்த 1972ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட 'பலஸ்டிக்' ஏவுகணைத் தடை ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா வெளியேறுவதாக சமீபத்தில் அமெரிக்க அதிபர் புஷ் முன்னறிவித்தல் கொடுத்துள்ளது தெரிந்ததே. (ஒ-6)

# கொங்கோவில் 3 பொலீஸார் படுகொலை!

கின்ஸாஸா,டிசெ.17

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் ஒரு பல்கலைக்கழகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற கலவரத்தில் மூன்று பொலீஸார் மாணவர்களால் அடித்துக் கொல்லப்பட்டனர்.

கல்வி கட்டணங்கள் உயர்த்தப்பட்டதை எதிர்த்து மாணவர்கள் நடத்திய போராட்டத்தைக் கட்டுப்படுத்தச் சென்ற பொலீஸாரே அடித்துக் கொல்லப்பட்டவர்களாவர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து பல்கலைக்கழகத்துக்குச் சென்ற கொங்கோ கல்வி அமைச்சர் மாணவர்களின் கல்வீச்சுக்கு இலக்காகி பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேறினார். (ஒ)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

கௌரவ, கிறிஸ்தவ சமயத்தைச சேர்ந்த, 1969இல் பிறந்த, கொழும்பில் தனியார் கம்பனி ஒன்றில் உயர் பதவி வகிக்கும் மணமகனுக்கு தகுதியான 5வயது குறைந்த கொழும்பில் வசிக்கக்கூடிய மணமகள் தேவை. முழு விவரத்துடன் கடித மூலம் தொடர்புகொள்ளவும். தகுதியற்றவை திருப்பி அனுப்பிவைக்கப்படும். விள. இல.1419, C/o உதயன், யாழ்ப்பாணம். (95996)

இந்து கௌரவ குடும்பம், 1970, அவிட்டம், 8இல் செவ்வாய், உயரம் 5'10", தொழில் TECHNOLOGIST, கனடா CITIZEN மணமகனுக்கு பட்டதாரி அலலது A/L சித்தியடைந்த 28 வயதுக் குட்பட்ட மணமகளை பெற்றோர் விரும்புகிறார்கள். (இம்மாதம் கடைசியில் வருகிறார்) தொடர்பு: வி.இல.1417, C/o உதயன், யாழ்ப்பாணம். (95872)

### புத்தகங்கள்

340 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள். 1.நாடகம் எழுதுவது எப்படி? 2.யாழ்ப்பாணமா? கொழும்பா? 3.வீடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும் 4.யாழ்ப்பாணம் 5.இலக்கியக்கட்டுரைகள் 6.ஒரு காதலின் கதை. (95985)

### ஆங்கிலம்

A/L, A/L இற்குத் தோற்றிய மாணவர்கள், பல்கலை புகுமுக மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் 20.12.01இல் ஆரம்பம். தொடர்பு: க. நாகேந்திரம் (ஆசிரியர்), இல.34/4, செட்டித்தெரு, நல்லூர். குறிப்பு: அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். (95832)

### விற்பனை

கலர் மீன்கள், லவ் பேட்ஸ் (பச்சை, நீலம்),மோட்டர்கள் மற்றும் அழகுசாதனப் பொருள்கள், வெள்ளைக் கற்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40/17, சீனியர் ஒழுங்கை (வீரகத்திப் பிள்ளையார் கோயில் ஒழுங்கை), கலட்டி, யாழ்ப்பாணம். (95915)


## ஆசிரியருக்கான குறைநிவிர்த்திசேவை ஒருநாள் மட்டும்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வலிகாமம் கல்வி வலயத்துடன் சேர்ந்து நடத்தும் குறைநிவிர்த்தி சேவை நாளை செவ்வாய்க்கிழமை ஒருநாள் மட்டுமே நடைபெறும் என்றும் -

காலை 10 மணிமுதல் உடுவில், தெல்லிப்பழை கோட்டங்களைச் சேர்ந்தவர்களும் பிற்பகல் 1.30 மணிக்குச் சங்கானை, சண்டிலிப்பாய் கோட்டங்களைச் சேர்ந்தவர்களும் குறைகளைத் தெரிவிக்கலாம் என்றும் -

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. இந்தக் குறைநிவிர்த்தி சேவை நாளையும் நாளை மறுதினமும் இருநாள்கள் நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது (ஓ)


## வாழ்த்திப் பாராட்டி மகிழ்கின்றோம்



எமது நிலையத்தின் செயலாளரும்
அளவெட்டி தபாலக முன்னாள் ஊழியருமான
**திரு.செல்லையா பிறேமன்**
அவர்கள்

தனது திறமையையும் முயற்சியையும் நம்பிக்கையையும் மூலதனமாகக் கொண்டு பரீட்சையில் சித்தியடைந்து தபாலதிபர் தரம் IIஇற்கு பதவி உயர்வு பெற்றுள்ளார். இவர் மேலும் பல பதவி உயர்வுகளைப்பெற்று நாட்டுக்குச் சேவையாற்ற வேண்டுமென உளமார வாழ்த்திப் பாராட்டி மகிழ்கின்றோம்.

முற்போக்கு வாலிபர் சனசமூக நிலைய நிர்வாகிகள்.
*அளவெட்டி.* (96012)

## நன்றியுணர்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

பழம் பெருமை வாய்ந்த பெரியதம்பிரான் (சிவன்) ஆலயம்
இமையாணன் - உடுப்பிட்டி

எமது ஆலயத் திருப்பணி வேலைகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்து எமது ஆலய வளர்ச்சிக்கு உதவிய



முன்னாள் அமைச்சர்
**திரு.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும் -



வல்வெட்டித்துறை- உடுப்பிட்டி
ஈ.பி.டி.பி. பொறுப்பாளரான
**திரு.யோகராசா** (யோகாத் தோழர்)
அவர்களுக்கும் -

எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*இமையாணன்,*
*உடுப்பிட்டி.* (96013)

- பண்டிதர் செ.சிவக்கொழுந்து,
ஆதீனகர்த்தா, பெரியதம்பிரான் ஆலயம்.



## நல்லூர் பிரதேச சபை

## மீள் கேள்வி அறிவித்தல் - I

கேள்விப்பத்திர விநியோகம்:- 19-12-2001 நண்பகல் 12.00 மணி வரை.
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 20-12-2001 மு.ப. 10.00 மணிவரை.
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி:- 20-12-2001 பி.ப. 2.00 மணிக்கு.

ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கு அமைவாக கீழ்க்கண்டவற்றிற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

| துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம்/ இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம். | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (ஜீ.எஸ்.ரீ. தவிர்ந்தது) |
|---|---|---|---|
| **நல்லூர் உப-அலுவலகம்** | | | |
| 01. திருநெல்வேலிச் சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம். | 500/- | 5,000/- | 2,95,500/- |
| **கொக்குவில் உப-அலுவலகம்** | | | |
| 01. கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக்கடை. | 350/- | 3,000/- | 1,61,500/- |
| 02. கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை. | 350/- | 3,000/- | 45,200/- |
| 03. கொக்குவில் உப-அலுவலக ஆட்டிறைச்சிக் கடை. | 350/- | 3,000/- | 40,000/- |

## அறிவித்தல் - II

ஏற்கனவே கோரப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கு அமைய கீழ்க்கண்ட கடைகளுக்கு மேலே காட்டப்பட்ட திகதிகளின் பிரகாரம் கேள்விகள் கோரப்படுகின்றன.

| கடை இல. | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளப் படும் ஆகக் குறைந்த தொகை (ஜீ.எஸ்.ரீ. தவிர்ந்தது) |
|---|---|---|---|
| 36 | 500/- | 10,000/- | 3,24,000/- |
| 39 | 500/- | 10,000/- | 3,24,000/- |
| 38 | 500/- | 10,000/- | 3,24,000/- |

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
2001.12.14.

(C-19785)


**க.மணிபல்லவராஜன் ஜே.பி.யு.எம்.,**
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.


## கல்விச்சாலைக் காட்சிகள்...




யாழ்.சைவ பரிபாலன சபையினரால் நடத்தப்படும் பாலர் பாடசாலை மாணவர்களின் விளையாட்டுவிழா அண்மையில் நாவலர் ஆச்சிரமத்தில் நடைபெற்றது.

பாலர் பாடசாலை மாணவர்கள் விநோதஉடைப் போட்டிக்காக அணிவகுத்து நிற்பதைப் படத்தில் காணலாம். அருகில் சைவப்புலவர் வ.கந்தசாமி காணப்படுகிறார். (க-7)



தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

உடுவில் பிரதேச செயலாளர் கே.கேதீஸ்வரன் வகுப்பறைக் கட்டடத்தைத் திறந்து வைப்பதையும், அருகில் உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன், பாடசாலை அதிபர் செ.செல்வராசா மற்றும் விருந்தினர்கள் காணப்படுகின்றனர். (க-7-152)



சுழிபுரம் காட்டுப்புலம் அ.த.க.பாடசாலைக்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இது தொடர்பாக இடம்பெற்ற வைபவத்தில் சங்கானைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் நா.தனபாலசிங்கம், விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்புச் செய்த குடும்பத்தவர் சார்பில் செல்வி அ.நிர்மலா தேவி ஆகியோர் காணப்படுகின்றனர். (க-7-29)



சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் கட்டப்படவுள்ள மூன்று மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் அடிக்கல்லை நட்டுவைப்பதைப் படத்தில் காணலாம். (க-7-29)

# பிக்குகள் நாடாளுமன்றம் செல்வது பௌத்த சமயத்துக்கே இழுக்கு!

## இப்படிக் கூறுகிறார் கண்டி மகாநாயக்கர்

கொழும்பு,டிசெ.17

பௌத்த பிக்குகள் நாடாளுமன்றத்துக்குச் செல்வது பௌத்த சமயத்துக்கே பெரும் இழுக்காக அமைந்துவிடும்.

- இவ்வாறு கண்டி மகாநாயக்கர் வணக்கத்துக்குரிய மடிகே பஞ்ஞாசீக தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

"பௌத்த பிக்குகள் நாடாளுமன்றம் சென்று நாட்டின் நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபடுவது முறையல்ல.

"எனவே எமது மதத்திற்கு இழுக்கு ஏற்படும் வகையில் பௌத்த பிக்குகள் நாடாளுமன்றம் செல்வதைத் தடுத்து நிறுத்துமாறு -

"நாட்டின் ஜனாதிபதிக்கும், புதிய பிரதமருக்கும் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளேன்" என்றும் தெரிவித்திருக்கிறார்.

நடந்துமுடிந்த பொதுத் தேர்தலில் காலி மாவட்டத்திலிருந்து பொ.ஐ.முன்னணியின் சார்பில் போட்டியிட்ட வத்தேகம சமித தேரர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பௌத்த பிக்கு இவராவார்.

இதேவேளை -

நாடாளுமன்ற சம்பிரதாயப்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சபாநாயகர் நாடாளுமன்றுக்கு வரும்போது எழுந்து நின்று மரியாதை செலுத்தவேண்டும்.

இதற்கு பௌத்த பிக்குகள் விதிவிலக்கல்ல.

- இவ்வாறு நாடாளுமன்றின் செயலாளர் நாயகம் தம்மிக்க கித்துள்கொட தெரிவித்துள்ளார்.

எனினும் பௌத்த பிக்கு ஒருவர் தமது காவி உடைகளுடன் நாடாளுமன்ற அமர்வுகளில் பங்குபற்றத் தடை ஏதும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (க-6)

## விபத்தில் சிக்கிய சிறுமி மரணம்

அல்வாய் தெற்கில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 6 வயதுச்சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

அல்வாய் தெற்கு ஸ்ரீலங்கா பாடசாலைக்குச் சமீபமாக கடந்த 13ஆம் திகதி நடந்த இந்த விபத்தில் கோபாலகிருஷ்ணன் சயானா (வயது 6) என்ற சிறுமியே மரணமானார். வீதியைக் கடக்க முற்பட்ட சமயம் சிறுமி விபத்துக்குள்ளானார் என்று தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த சிறுமி ஆபத்தான நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

அங்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்குட்படுத்திய நிலையில், இரு தினங்களின் பின் நேற்று முன்தினம் மரணமானார். (க-15)

## கசிப்பு மற்றம் கோடா வைத்திருந்த

# அச்சுவேலி, இளவாலை வாசிகளுக்கு 95 ஆயிரம் ரூபா அபராதம்!

கசிப்பு மற்றும் கோடா வைத்திருந்த இரு குற்றவாளிகளுக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றப் பதில் நீதிவான் க.அரியநாயகம் 95ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நடந்த இந்த வழக்கு விசாரணைகளின் போது அச்சுவேலியைச் சேர்ந்த நடராஜா சிவனேஸ்வரன் என்பவர் 210 போத்தல் கோடா வைத்திருந்தமைக்காக 75 ஆயிரம் ரூபா குற்றப் பணம் செலுத்துமாறும் -

தவறினால் 2 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார்.

இவருக்கு ஏற்கனவே கசிப்பு வழக்கு ஒன்றில் 15ஆயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்துமாறு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இளவாலையைச் சேர்ந்த மரியநாயகம் தேவநாயகம் என்பவர் 20 போத்தல் கசிப்பு வைத்திருந்தமைக்காக 20 ஆயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்துமாறும் -

தவறினால் 6 மாத கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார். (க-6-9)

# 20ஆம் திகதிக்குப் பின்னர் மீண்டும் ஜனவரியிலேயே செஞ்சிலுவைக் கப்பல்

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் சேவை எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறும் சேவையுடன் இடைநிறுத்தப்பட்டு மீண்டும் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படும்.

இவ்வாறு செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு செல்லவுள்ள நோயாளர்களையும் உதவியாளர்களையும் ஏற்றிச்செல்லும் இந்தக் கப்பல் சேவையுடன் இடைநிறுத்தப்படவுள்ளது.

கப்பலில் ஒருசில திருத்த வேலைகள் மேற்கொள்ளவேண்டியிருப்பதால், திருத்தவேலைகள் பூர்த்தியானதும் மீண்டும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் இருந்து சேவைகள் வழமைபோல் நடைபெறும் - எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ள நோயாளர் சேவைக் கப்பலில் பயணஞ்செய்யவுள்ள அனைவரையும் காலை 7 மணிக்கு பயண ஒழுங்குகளுடன் போதனா வைத்தியசாலைக்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-6-139)

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ்

# இரண்டாவது தடவையாகக் கைதான இரு அதிபர்களுக்கும் பிணை அனுமதி

கொழும்பு,டிசெ.17

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் படையினரால் இரண்டாவது தடவையாகக் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இரு பாடசாலை அதிபர்களையும் நீதிவான் எஸ்.ஏ.அப்துல்காதர் பிணையில் செல்ல அனுமதியளித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள களுமுந்தன்வெளிப் பாடசாலை அதிபர் வீரக்குட்டி கோபாலபிள்ளை மற்றும் பளுகாமம் கண்டமணி வித்தியாலய அதிபர் கண்ணப்பன் இராசதுரை ஆகிய இருவரையுமே நீதிவான் பிணையில் விடுவித்தார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் களுவாஞ்சிக்குடி வங்கிக்குச் சென்றுகொண்டிருந்த சமயம் இவர்கள் இருவரையும் படையினர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்து பின்னர் விடுவித்தனர்.

அண்மையில் இவர்கள் மீண்டும் படையினரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். (க-6)




**அஷ்டலக்ஷமி பதிப்பக நிறுவுநர் ஆறுமுகம் கந்தையாவுக்கு அண்மையில் மொறீஷியஸில் நடைபெற்ற உலக சைவ மாநாட்டில் 'சைவ நெறிக் காவலர்' என்ற விருது வழங்கப்பட்டது. அதனை ஒட்டி அவரைக் கௌரவித்து உலக சைவப் பேரவை, கொழும்பு இராமகிருஷ்ண மிஷனில் வரவேற்பு விழா ஒன்றை அண்மையில் நடத்தியது. அவ்விழாவில் உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளைக்கான தலைவர் கா.தயாபரன், ஆ.கந்தையாவுக்கு பொன்னாடை போர்த்து, சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம்.**

**அருகில் சைவ முன்னேற்றச் சங்கத் தலைவர் சி.தனபாலாவும் காணப்படுகிறார். (ஜ-9)**

## பாதுகாப்பு அமைச்சு செயலாளர் இராஜினாமா

கொழும்பு,டிசெ.17

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்துக்குச் சென்று தன்னுடன் கடமையாற்றிய அதிகாரிகளிடம் நேற்று சில்வா விடைபெற்றுக்கொண்டார்.

தனது பதவியை இராஜினாமாச் செய்வதற்கு முன்பாகக் கூட்டுப்படைகளின் கட்டளை அதிகாரி ஜெனரல் றொஹான் தளுவத்த மற்றும் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, விமானப் படைத் தளபதி எயார் வைஸ் மார்ஷல் ஜெயலத் வீரக்கொடி ஆகியோருடன் அவர் ஆலோசனை நடத்தியிருந்தார். (க-6)

## திறைசேரிக்கு புதிய செயலாளர்

கொழும்பு,டிசெ.17

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த பிரமுகரான சரித்த ரத்வத்த திறைசேரியின் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

டாக்டர் பி.பி.ஜெயசுந்தரவின் இடத்துக்கு அவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். (ஐ)

# வாசகர் திருமுகம்

## பெறுபேற்று நிலை தெரியவருமா?

2001ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ.(உயர்தர) பரீட்சைப் பெறுபேறுகள் கிடைத்துள்ளன. ஆனால் வழமைபோல் அல்லாது இந்தமுறை மாணவர்களின் பெறுபேறுகளினடிப்படையிலான மாவட்ட, தீவு நிலைகள் அனுப்பப்படவில்லை. இதற்கான காரணம் என்ன? இது உண்மையில் மாணவர்கள் மத்தியில் ஒரு விரக்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் மாணவர்கள் தமது நிலையை நிச்சயிக்க முடியாத நிலையில், அதாவது பல்கலைக்கழக அனுமதி கிடைத்துள்ளதா? இல்லையா? என்று தெரியாத நிலையில் பல மாணவர்கள் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல பொதுவாக இந்த ஆண்டு யாழ்.மாவட்டத்தில் கலைப்பிரிவின் பெறுபேறுகள் வீழ்ச்சியடைந்துள்ளமை அனைவருக்கும் தெரிந்ததே.

இதனால் மாணவர்கள் வெட்டுப்புள்ளி குறைவடைந்து பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அடுத்தமுறை பரீட்சைக்குத் தோற்றுவதா? இல்லையா? என்ற நிலையில் இருக்கின்றனர்.

அதற்கிடையில் அடுத்த பரீட்சைக்கான விண்ணப்பங்களை விரைவாக அனுப்புமாறு கல்வியமைச்சு அறிவித்துள்ளது. ஆகவே கல்வியமைச்சு இந்நிலையை மனப்பூர்வமாகப் புரிந்துகொண்டு மாவட்ட, தீவு நிலைகள், புள்ளிகள் என்பவற்றை மிக விரைவாக அனுப்பிவைத்து மாணவர்களுக்கு உதவவேண்டும்.

*திருநெல்வேலி.* **வி.கரன்.**

## மூன்றாவது முறையும் பரீட்சை எழுதலாமா?

2002ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவோர் பாடசாலைகள் மூலம் மட்டுமே தமது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டு புதிய பாடத்திட்டத்தின் பிரகாரம் 5 பாடங்களுக்குத் தோற்றிய மாணவர்கள் இரு தடவைகள் மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற முடியும் எனப் பரவலாகப் பலரும் பேசிக்கொள்கின்றனர்.

இந்நிலையில் எமது மாணவர்கள் பலர் மூன்றாவது முறையும் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாமா? விண்ணப்பிக்க முடியாதா? என்ற குழப்பத்திற்குள்ளாகி தபாற் திணைக்களத்திற்கு சென்று விசாரித்துள்ளனர். ஆனால் அவர்களுக்கும் பரீட்சை பற்றிய விபரம் தெரியவில்லை.

2002ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பரீட்சை நடைபெறவிருப்பதால் பரீட்சை நடைமுறைகளுடன் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் கூடிய அக்கறை கொண்டு இது பற்றிய விவரங்களை மாணவர்களுக்கு தெரியப்படுத்துவார்களா?

*கரவெட்டி.* **ஜி.எஸ்.பாலகரன்.**

## நியாயப்படுத்த முடியாத அதிபர் தர நியமனங்கள்!

அதிபர்களை நியமிப்பதற்காக 1994ஆம் ஆண்டு விண்ணப்பம் கோரப்பட்டது எனினும் பரீட்சை நடைபெறவில்லை. மீண்டும் 1999ஆம் ஆண்டு விண்ணப்பம் கோரப்பட்டு அதே ஆண்டு இரண்டு பரீட்சைகளும் ஒன்றாக நடத்தப்பட்டன. பின்னர் அதன் முடிவுகள் 2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வெளியாகின.

1999ஆம் ஆண்டு அதிபர் தரப் பரீட்சைக்குத் தோற்றி ஆவலுடன் முடிவுகளை எதிர்பார்த்திருந்தோம். முடிவுகளை வெளியிடாது காலம் தாழ்த்தியது மட்டுமன்றி அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி, தேர்தலை ஆயுதமாக்கி 04.08.2000ஆம் திகதியன்றோ, அதற்கு முன்னரோ நிரைவேற்று பதில் அதிபராகக் கடமையாற்றிய அனைவரும் தற்போது அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதிபர் வெற்றிடங்கள் இன்மையால் அதிபர் தரப் பரீட்சைக்குத் தோற்றியோரில் இருந்து அதிபர் தரம் Iக்கு இலங்கைத் தமிழர் ஒருவரும், அதிபர் தரம் IIக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து நான்கு பேர்களும் தெரிவாகியுள்ளனர்.

இலங்கையில் ஆசிரியர் சேவை, அதிபர் சேவை உருவாக்கப்பட்டது, திறமையின் அடிப்படையில் ஆசிரியர்கள், அதிபர்களை நியமிப்பதற்கே ஆகும். நீண்டகாலம் கஷ்டப் பிரதேசங்களில் பதில் அதிபர்களாகக் கடமையாற்றிய ஒருசிலரைத் தவிர, ஒருசில நாள்கள் - ஒரு சில மாதங்கள் பதில் அதிபர்களாகக் கடமையாற்றியவர்களையும் அதிபர்களாக நியமித்தமை ஏற்றுக்கொள்ளப்படவோ நியாயப்படுத்தப்படவோ முடியாதவை ஆகும்.

வருங்காலத்தில் ஏற்படும் அதிபர் தர வெற்றிடங்களுக்கு நடைபெற்ற அதிபர் தரப் பரீட்சை புள்ளிகளின் அடிப்படையில் புதியவர்களை நியமிக்க வலய, மாகாண, மத்திய அரச கல்வி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதிபர் தரப் பரீட்சை எழுதி பாதிக்கப்பட்ட அதிபர்கள் தங்களுக்கு ஒரு சங்கத்தினை அமைத்து அதன் மூலம் முயற்சி மேற்கொண்டால் பயன் கிடைக்கும் என எண்ணுகின்றேன்.

பூனைக்கு மணி கட்டுவது யார் என்று இருக்காமல் கூடிய விரைவில் சம்பந்தப்பட்டவர்கள் செயலில் இறங்குவது நல்லது.

*யாழ்ப்பாணம்.* பரீட்சை எழுதிப் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் சார்பாக **க.கோவிந்தராசா.**

## கிறிஸ்தவ பாடத்தைக் கற்பிக்க ஒழுங்குகள் நடக்கின்றன

'கிறிஸ்தவ பாட ஆசிரியர் பற்றாக்குறை நீங்குமா?' என்ற தலைப்பில் கடந்த 13.12.2001ஆம் திகதிய உதயனின் வாசகர் திருமுகத்தில் சாவகச்சேரியைச் சேர்ந்த அர்ச்சுதன் வெளிப்படுத்திய அங்கலாய்ப்பை நன்றியோடு ஏற்றுக்கொள்ளுகின்றோம்.

கடந்த காலங்களில் சில பாடசாலைகளில் இப்பற்றாக்குறை இனங்காணப்பட்டு எமக்கு அறிவிக்கப்பட்டமையால் தேசிய கிறிஸ்தவ சங்கத்தினால் கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் கிறிஸ்தவ பாடத்தைக் கற்பிக்க, இயலுமானவரை ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. தொடர்ந்து இவ்வுதவிகளைச் செய்வதற்கு முயற்சி எடுக்க முடியும்.

எனவே கிறிஸ்தவ பாட ஆசிரியர் தேவைப்படும் பாடசாலைகள் தமது கல்லூரி அதிபர்களூடாக அல்லது தமது சபைக் குருவினூடாக அல்லது நேரடியாக எம்மோடு தொடர்பு கொள்ளவும்.

அத்துடன் 2001ஆம் ஆண்டுக்கான மாதிரி வினாத்தாள் தேவைப்படுவோரும், மேலும் கிறிஸ்தவ பாட ஆசிரியர்களாக வர விரும்புகின்றவர்களுக்கான தேசிய சமய அறிவுப் பரீட்சை அல்லது சமய அறிவுக்கான டிப்ளோமா பட்டப் பரீட்சை எடுக்க விரும்புகின்றவர்களும் எம்மோடு தொடர்புகொண்டு இக்குறையை நீக்க முன்வருவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

*யாழ் கிறிஸ்தவ ஒன்றியம்,*
*வை.எம்.சீ.ஏ.கட்டடம்,*
*109, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.*

**செயலாளர்.**

காணாமற்போன படையினர் சங்கத் தலைவர்

# நாணயக்கார ஜன.10இல் வன்னிக்குச் செல்கிறார்!

கொழும்பு,டிசெ.17

கடமையில் இருந்த சமயம் கைதாகிக் காணாமற்போன படையினரது பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தின் தலைவர் டி.பி.நாணயக்கார எதிர்வரும் ஜனவரி மாதம் 10ஆம் திகதி வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இதற்கான அனுமதியைப் பாதுகாப்பு அமைச்சு வழங்கியுள்ளது.

நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டப் புதிய அரசாங்கம் உடனடியாக யுத்தநிறுத்தம் ஒன்றை மேற்கொண்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு முன்வர வேண்டும் என்று நாணயக்கார கோரிக்கை விடுத்துள்ளார் என்றும் -

இதற்கான முயற்சியை மேற்கொள்வதற்காகவும் விடுதலைப் புலிகள் வசம் தடுப்புக்காவலில் உள்ள படையினரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதற்காகவுமே தாம் வன்னிக்கு அவசரமாக விஜயம் செய்வதாக அவர் கூறியுள்ளார். (க-6)

# நவாலி தேவாலயத்தில் திருட்டு

நவாலி தென்னிந்தியத் திருச்சபை தேவாலயம், அதன் அருகில் உள்ள குரு இல்லம் என்பன உடைக்கப்பட்டு அங்கிருந்த பெற்றோல், கார் பற்றறி, ஒலிபெருக்கி சாதனம் என்பன திருடப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை நள்ளிரவு வேளை தேவாலயக் கதவையும், குரு இல்லத்தின் ஜன்னலையும் உடைத்து உள்ளே புகுந்த திருடர்கள் மேற்படி பொருள்களை அபகரித்துக் கொண்டு தேவாலய உண்டியலையும் உடைத்து அதனுள் இருந்த ஒரு தொகைப் பணத்தினையும் எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-100)

அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்
SALE SALE SALE SALE SALE
புதுவருட மலிவு விற்பனை!
19-12-2001 புதன் முதல்
முந்துங்கள் கையிருப்பு
தீருவதற்கு முன்!
பின்பு யோசிக்காதீர்கள்!!
மனவருத்தப்படுவீர்கள்!!
மலிவு! மலிவு!
347, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/19775)

### மாணவருக்கு மண்ணெண்ணெய்

வலி.கிழக்கு வடபகுதி (அச்சுவேலி) ப.நோ.கூ.சங்கம், ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குக் கல்வி கற்பதற்கு வசதியாக மண்ணெண்ணெய் வழங்குகின்றது.

பங்கீட்டு உணவுப் பொருள்கள் பெற்றுக்கொள்ளும் கிளை நிலையங்களில் பரீட்சை அனுமதி அட்டையைக் காண்பித்து இரண்டு லீற்றர் வீதம் மண்ணெண்ணெயைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-11)

### விவசாயிகளுக்கு கடன் உதவி

சண்டிலிப்பாய்,டிசெ.17

பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம், உறுப்பினர்களான விவசாயிகளுக்கு மிளகாய் செய்கையை ஊக்குவிக்கு முகமாகக் கடனுதவி வழங்குவது என்று தீர்மானித்துள்ளது.

மிளகாய்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு தலா ஐயாயிரம் ரூபா முதல் எட்டாயிரம் ரூபாவரை கடன் வழங்கப்படவுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கடனுதவியைப் பெறவிரும்பும் விவசாயிகள் தத்தமது கிளைக் குழு ஊடாக சங்கத்திற்கு எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும் என்றும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (க-135)

### பாலபண்டிதர் பரீட்சை

யாழ்.ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினால் வருடந்தோறும் நடத்தப்படும் பிரவேச, பாலபண்டிதர் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் நடத்தப்படவுள்ள இந்தப் பரீட்சைகளுக்கான விண்ணப்பமுடிவு திகதி எதிர்வரும் 31ஆம் திகதி ஆகும்.

பரீட்சை விண்ணப்பங்கள், செயலாளர், 223, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

ஹற்றன் நஷனல் வங்கியின்
ஆதரவில்
யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தால் நடத்தப்படும்
2001 ஆம் ஆண்டுக்கான
மாபெரும் கூடைப்பந்தாட்ட இறுதிப்போட்டி
இடம் : வேம்படி மகளிர் உயர் பாடசாலை
நாள் : இன்று (17.12.2001) திங்கட்கிழமை
பிரதமவிருந்தினர் :- திரு.M.திருநாவுக்கரசு
(ஓய்வுபெற்ற மேலதிக நீதிபதி)
திருமதி மங்கையர்க்கரசி திருநாவுக்கரசு
பங்குபற்றும் கழகங்கள் :- 1) பெண்கள்
யாழ். புள்ஸ் (Jaffna Bulls)
எதிர்
யாழ். பல்கலைக்கழகம்
நேரம் :- பிற்பகல் 3.15மணி
2) ஆண்கள்
யாழ். புள்ஸ் (Jaffna Bulls)
எதிர்
சென்றலைட்ஸ்
நேரம் :- மாலை 4.15மணி
அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(C-19781)
ஹற்றன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி.

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

## சந்தைகள் / இறைச்சிக் கடைகளுக்கான

## மீள் கேள்வி அறிவித்தல் - 2002

கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி : 2001.12.20 பிற்பகல் 15.00 மணி வரை.
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி : 2001.12.21 பிற்பகல் 14.00 மணி வரை.
கேள்விகள் திறக்கப்படும் திகதி : 21.12.2001 பிற்பகல் 15.00 மணி.

ஏனைய விவரங்கள் தலைமையலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

## கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | மாத வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப் பணம் மீளளிக்கக் கூடியது | கேள்விப் பத்திரப் பணம் ஜீ.எஸ்.ரி. நீங்கலாக |
|---|---|---|---|---|
| **சுழிபுரம் உப அலுவலகம்** | | | | |
| பல்லசுட்டி சந்தை (தற்காலிக சந்தைக் கேள்விக்காரர் ஒழுங்கு செய்தல்) | | 6,000/= | 500/= | 250/= |
| **வட்டுக்கோட்டை உப அலுவலகம்** | | | | |
| வட்டுக்கோட்டை பொதுச் சந்தை (இறாத்தலடி) | | 7,000/= | 500/= | 250/= |
| **அராலி உப அலுவலகம்** | | | | |
| தற்காலிக சந்தை (கேள்விக்காரர் ஒழுங்கு செய்தல்) | | 1,200/= | 200/= | 250/= |
| மீன் சந்தை (அராலி கிழக்கு) | | 2,400/= | 200/= | 250/= |
| **சுழிபுரம் உப அலுவலகம்** | | | | |
| மாட்டிறைச்சிக் கடை | 50/= | 10,000/= | 500/= | 250/= |
| கருவாட்டுக்கடை | 50/= | 2,500/= | 500/= | 250/= |
| **வட்டுக்கோட்டை உப அலுவலகம்** | | | | |
| மாட்டிறைச்சிக் கடை | 75/= | 10,000/= | 500/= | 250/= |
| ஆட்டிறைச்சிக்கடை | கேள்விக் காரர் கடை ஒழுங்கு செய்தல் வேண்டும். | 1,500/= | 500/= | 250/= |
| **அராலி உப அலுவலகம்** | | | | |
| மாட்டிறைச்சிக் கடை | | 6,000/= | 500/= | 250/= |

*குறிப்பு:* கேள்வித் தொகை, கேள்விப் பத்திரப் பணம், மாத வாடகை ஆகியவற்றுக்கு ஜீ.எஸ்.ரி. வரி 12.5% செலுத்தப்படல் வேண்டும்.

வலி.மேற்கு பிரதேச சபை,
தலைமையலுவலகம்,
சுழிபுரம்,
2001.12.14.

ந.திரிலோகநாதன், ஜே.பி.யு.எம்,
தலைவர்,
வலி.மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

(C-19784)

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 - 04 - 1916



மறைவு 28 - 12 - 2000

## அமரர் ஆறுமுகம் துரைசாமி

திதி:பூர்வபக்கதிருதியை

அன்பையும் அறிவையும் ஊட்டி வளர்த்த
எமது அருமைத் தந்தையே!
ஓராண்டு சென்றாலும் உமது நினைவுகள்
என்றும் எங்கள் நெஞ்சைவிட்டகலாது!
ஓம் சாந்தி!

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*
(96001)

# ஓராண்டு நினைவு அஞ்சலி



## திருமதி பரிமேலழகன் யோகேஸ்வரி

மலர்வு 25-101971 உதிர்வு 28-12-2000

அம்மா நீ சென்று இன்று அகவையும் ஒன்றாச்சு
சும்மாஎன் வயதும்ஓர் அகவைக்கு மேலாச்சு
அப்பாவும் நானுமாய் வாழ்க்கை என்றாச்சு
தப்பாமல் உறவினரால் வளர்வது என்றாச்சு

சிறப்பிழந்தோம் இல்லத்தில் நீசென்ற நாளிருந்து
சிறகொடிந்த பறவைகளாய் சேர்ந்து துடிக்கின்றோம்
கலங்கரை விளக்காய்நீ வாழ்ந்து மறைந்திடினும்
காலமெலாம் நின்நினைவில் வாழ்ந்திடுவோம் தாயே!
ஆண்டுபல சென்றிடினும் ஆறாது நின்நினைவு
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

கணவர் (பரி),
மகன் (யதுர்ஷன்).

*ஊரெழு மேற்கு,*
*சுன்னாகம்.*
(95889)

## உதயன்

### கதிர்காமர் வழியில் டிரோன் பெர்னாண்டோ!

'மோதகமும் கொழுக்கட்டையும் வடிவத்தில்தான் வேறு, இரண்டின் உள்ளடக்கமும் ஒன்றுதான்' என்பார்கள்.

அதுபோன்றுதான் சிங்களப் பெரும்பான்மையினரின் பெரிய கட்சிகள் இரண்டும் என்பது பொதுவாக இலங்கைத் தமிழரின் அபிப்பிராயம். அவர்களைப் பொறுத்தவரை ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பெயரில்தான் வெவ்வேறானவை. இனவாதப் போக்கிலும், இலங்கைத் தமிழரை அடக்கி ஆளுவதிலும் இரு கட்சிகளுக்கும் இடையில் அதிகம் வேறுபாடில்லை என்பதே அவர்களின் பொதுவான கருத்து.

புதிய வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவின் பிந்திய கருத்துக்கள் அதனை மீண்டும் ஊர்ஜிதம் செய்திருக்கின்றன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறிய அதே கருத்தை - அதே நிலைப்பாட்டை - அட்சரம் பிசகாமல் திருப்பி ஒப்புவித்திருக்கின்றார் ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த புதிய வெளிவிவகார அமைச்சர்.

ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வந்ததும் - ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவி ஏற்றதும் - இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிட்டிவிடும் என்று கனவு கண்டவர்களுக்கு நல்ல 'சூடு' வைத்திருக்கின்றார் அமைச்சர் டிரோன் என்றே கூறப்படுகின்றது.

பேச்சு மேசைக்கு வருவதற்குத் தயார் என்று புலிகள் எப்போதோ திட்டவட்டமாக அறிவித்துவிட்டனர். பேச்சுக்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக ஒரு தலைப்பட்சமாக நான்கு மாதங்கள் அவர்கள் யுத்தநிறுத்தமும் செய்தார்கள். அதைத் தொடர்ந்து இன்று வரை பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், மோதல் நிலையைத் தவிர்த்துப் பேச்சை ஆரம்பிப்பதற்கான சூழ்நிலையைத் தொடர்ந்தும் பேணி வருகின்றார்கள் அவர்கள்.

புலிகள் தாம் பேச்சுக்குத் தயார் என்பதைத் திட்டவட்டமாக அறிவித்த பின்னரும் -

அவர்கள் பேச்சுக்கு இணங்காதவர்கள் போன்றும், யுத்தத்தைத் தீவிரமாகத் தொடர்பவர்கள் போன்றும் சர்வதேச உலகுக்குக் காட்டிக்கொண்டு, 'பேச்சுக்கு வருமாறு புலிகளுக்கு அழுத்தம் கொடுங்கள், நெருக்குதல் கொடுங்கள்' என்று கீறல் விழுந்த 'ரெக்கோட்' போன்று கருத்து வெளியிட்டுக்கொண்டிருந்தார் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர்.

பேச்சு மேசைக்கு வரமுன்னர் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிடவேண்டும் என்று யதார்த்தத்தில் நடக்கமுடியாத விநோதமான - முன் நிபந்தனைகளை விதிக்கவும் கதிர்காமர் தவறவில்லை.

அந்தக் கருத்துக்களைத்தான் புதிய வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ கைவிடாமல் மீண்டும் ஒப்புவித்திருக்கின்றார்.

ஆக, ஆள்கள்தான் மாறியிருக்கின்றார்கள். கருத்துநிலை ஒன்றுதான். கொழுக்கட்டையும், மோதகமும் போல வடிவம்தான் வேறு. உள்ளடக்கம் ஒன்றே.

மிகமோசமான பொருளாதார நெருக்கடி நிலைமையின் பின்னணியில் புதிய அரசை ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றிருக்கின்றார். நாட்டின் கஜானா காலியாகி வெறுமையாகக் கிடக்கின்றது. மிகமோசமான பொருளாதார நெருக்கடியை நாடு சந்திக்கப் போகின்றது என மத்திய வங்கி அரசை எச்சரித்துள்ளது. வெளிநாடுகளிடம் யாசிக்கவேண்டிய நிலையில் புதிய பிரதமர் உள்ளார்.

முன்னைய அரசின் தீவிர யுத்த முனைப்புப் போக்கே இந்த மோசமான பின்னடைவு நிலைக்குக் காரணம் என்பது வெளிப்படை.

தனது யுத்த முனைப்புப் போக்கில் இருந்து இலங்கை அரசு விடுபட்டால்தான் மிக மோசமான பொருளாதார நெருக்கடி நிலையில் இருந்து நாடு மீள முடியும் என்று உதவி வழங்கும் நாடுகள் அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளன.

யுத்தப்போக்கில் இருந்து விடுபட்டு, அபிவிருத்திப் பாதையில் முன்னேறுவதை இலங்கை அரசு உறுதிப்படுத்தினால் மட்டுமே அதற்கு உதவமுடியும் என்றும் அந்த நாடுகள் கூறிவிட்டன.

இந்தப் பின்னணியில் -

யுத்தத்தை நிறுத்தி, அமைதிப் பேச்சுக்களை ஆரம்பித்து, இணக்கநிலையை உருவாக்கி, சமாதானத்தை ஏற்படுத்தினால்தான் நாடு தப்பிப்பிழைக்க முடியும்; பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளமுடியும். ஐ.தே.கட்சி தேர்தல் காலத்தில் வழங்கிய சமாதானம் பற்றிய வாக்குறுதியை நிறைவேற்றவும் முடியும்.

புதிய வெளிவிவகார அமைச்சரின் கூற்றுக்கள் இந்த நல்ல காரியங்கள் நடப்பதற்கு வழிசெய்யமாட்டா; குழப்புவனவாகவே உள்ளன.

ஐ.தே.கட்சி தலைமைத்துவம் இதைப் புரிந்துகொள்வது நல்லது. காலம் கடந்தால் - அல்லது கடத்தினால் 'குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடிய கதையாக' அது போய்விடும்.

# இந்திய நாடாளுமன்ற தாக்குதலை கண்டித்து வரதர் அறிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.17

இந்திய நாடாளுமன்ற வளவுக்குள் கடந்த வியாழனன்று நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலைக் கண்டித்து ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் சார்பில் வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப் பெருமாள் இந்த அறிக்கையை விடுத்துள்ளார்.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தியாவின் நாடாளுமன்ற வளவுக்குள் நடைபெற்ற தற்கொலைக் குண்டு வெடிப்பு மற்றும் பயங்கரவாதிகளின் துப்பாக்கிப் பிரயோகங்கள் காரணமாக 20க்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்படவும் பலர் படுகாயங்களடையவுமாக நேர்ந்த நிகழ்ச்சி கேட்டு அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உள்ளானோம். கொடூரமானதும் தீய நோக்கங்கள் கொண்டதுமான இந்த சம்பவத்தை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம்.

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவின் ஆட்சி மையத்தையே பயங்கரவாதம் தாக்கியிருப்பது மிகவும் எச்சரிக்கைக்கு உரிய விடயமாகும். பயங்கரவாதிகளும் அவர்களின் பயங்கரவாத நடவடிக்கைகளும் இன்று சர்வதேசமயப்பட்டிருப்பதையே அண்மைக்கால சம்பவங்கள் காட்டுகின்றன.

இந்த ஆபத்தான நிலைமைகளை முறியடிப்பதில் உலக ஜனநாயக சக்திகள் தமது தேசிய நலன் என்ற வரையறைக்குள் மட்டுமே தொடர்ந்தும் செயற்படுவார்களானால் உலகில் ஜனநாயக விழுமியங்களும் பெறுமானங்களும் பயங்கரவாதத்தால் விழுங்கப்பட்டு நாளடைவில் உலக மக்கள் தாங்கள் யாரால் அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று தெரியாமலே அடக்கப்பட்டிருக்கும் நிலையேற்படும்.

சர்வதேச ஜனநாயக சமூகங்கள் தமது தேச எல்லைகளையும் கடந்து ஒருவருக்கொருவர் துணையாக நின்று, அவ்வாறானதொரு சர்வதேச அராஜகம் ஏற்படுவதை முன்னெச்சரிக்கையோடு விரைந்து தடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

இந்திய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை திடீர்த் தாக்குதல் மூலம் இந்திய அரசாங்கத்தையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பயங்கரவாதிகள் தமது முற்றுகைக்குள் கொண்டுவர முற்பட்டிருக்கிறார்கள் என்றே தெரிகிறது.

திடீர்த் தாக்குதலாக இருந்த போதிலும் அத்தீயநோக்கத்துக்கு இடமளிக்கமால் நிலைமைகளை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த இந்திய பாதுகாப்பு மற்றும் காவல் படையினர் பாராட்டுக்கு உரியவர்களாவர். இக்குண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூடுகளுக்குப் பலியானவர்களின் குடும்பங்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்திய உபகண்டத்தில் வாழும் மக்கள் அனைவரும் அமைதியுடனும், பாதுகாப்பாகவும், சகோதரத்துவமாகவும் வாழ இந்தியா மேற்கொள்ளும் அனைத்து முன்முயற்சிகளுக்கும் எமது ஒத்துழைப்பை நிச்சயமாக வழங்குவோம் என்றும் இவ்வேளையில் தெரிவித்துக்கொள்கிறோம். - என்று அதில் உள்ளது.

(க-7)

## நாட்டு நடப்பு

### கட்டில்தான் சாட்சியடா!

அன்பை மிக சொரிந்தாயடா!
அடிக்கடி வீடு வந்தாயடா!
என்னையே முடிப்பேன் என்று
என்தாய்க்கு வாக்கு அளித்தாயடா!
இன்புற அருகில் வைத்து
இனிய படம் காட்டினாயே!
அன்பென்று நீ தந்தவற்றை
அறியும் அக் கட்டிலடா
இன்றோ பத்து லட்சம் வாங்கி
எழுதினாயோ! வேறு மணம்
உன்னைப்போல் ஆண்களடா
உலகில் வாழும்மட்டும்
என்னைப்போல் ஏமாளிகள் இங்கு
இருக்கத்தான் செய்வாரடா
பணத்திற்கு பண்பைவித்த பேயே!
படித்துக் காட்டடா மனைவிக்கிதை.

*- விகடகவி.*

### மூலப்பொருள்கள் வந்து சேருவதில் தாமதம்

# குடாநாட்டில் ஆரம்பித்த புனரமைப்புப் பணிகளை பூரணப்படுத்தமுடியாது அதிகாரிகள் திண்டாட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.17

யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவரும் பல புனரமைப்பு பணிகளுக்குத் தேவையான மூலப் பொருள்களை கொழும்பில் இருந்து எடுத்துவர ஏற்படும் கால தாமதம் காரணமாக அவற்றை நேர காலத்துடன் நிறைவுசெய்ய முடியாமல் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் திணறுகின்றனர்.

இந்தப் புனரமைப்புப் பணிகளைப் பொறுப்பேற்றுள்ள ஒப்பந்தகார நிறுவனங்கள் அரைகுறை நிலையில் விட்டுவிட்டு மூலப் பொருள்களை எதிர்பார்த்து காத்திருக்கின்றன.

இது தொடர்பாக ஒப்பந்த நிறுவனங்களின் அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில் -

யாழ். பொது நூலகத்தை புனரமைத்துவரும் நிறுவனம் நூலகத்திற்கு பொருத்துவதற்குத் தேவையான நிலைகள் மற்றும் ஜன்னல்கள், கதவுகள் ஆகியவற்றை கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்துவர வேண்டியுள்ளது.

.அதே சமயம் பொது நூலகத்தின் உடைந்த பகுதிகள் புனரமைக்கப்பட்டு தற்போது நிலம் அமைக்கும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன. ஆரம்பத்தில் எடுத்துவரப்பட்ட ஒரு தொகுதி நிலைகள் அங்கு பொருத்தப்பட்டுள்ளன.

பொது நூலகத்திற்கு இன்னும் கதவுகள் பொருத்துவதும் வர்ணம் பூசுவதுமே எஞ்சியுள்ளன. இவற்றுக்குத் தேவையான பொருள்கள் உடனடியாக கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டால் எதிர்வரும் தைப்பொங்கலுக்கு முன்னர் திருத்தும் பணிகள் பூரணமாக்கப்பட்டு, உரியவர்களிடம் திறப்பை ஒப்படைப்போம் என்று அந்நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை - யாழ்.மத்திய கல்லூரிக்கு முன்பாக உள்ள மணிக்கூட்டுக் கோபுர புனரமைப்பு வேலைகளும் பூர்த்தியடையும் நிலையில் உள்ளபோதிலும் -

அவற்றுக்குத் தேவையான பொருள்கள் கொழும்பில் இருந்து எடுத்துவரப்படாது இருப்பதால் கால தாமதம் ஏற்பட்டுள்ளதாக யாழ்மாநகர சபை அதிகாரிகள் கருத்துத் தெரிவித்தனர்.

மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு பொருத்துவதற்காக பிரித்தானிய இளவரசரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட மணிக்கூடுகளும் கொழும்பில் இருந்து இன்னும் எடுத்துவரப்படவில்லை என்றும் கூறப்பட்டது.

நவீன சந்தைப் பகுதியில் புனரமைக்கப்பட்ட கடைகளும் இதுவரை பூரணப்படுத்தப்படாமல் குறையாக உள்ளதையும் அவதானிக்க முடிந்தது.

இவ்வாறு குடாநாட்டில் பல புனரமைப்புப் பணிகள் இடைநடுவே கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.

வீதிகளில் கற்கள் குவிக்கப்பட்ட போதிலும் தேவையான தார் இல்லாததால் பல வீதிகள் வருடக்கணக்காக புனரமைக்கப்படாமல் இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (க-6)

### கௌரவிப்பு

பண்டிதர் தி.பொன்னம்பலவாணர் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயக் குருக்கள் சிவஸ்ரீ சு.சுந்தரராசக் குருக்களால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஒரு மாதமாக ஆலயத்தில் நடைபெற்ற காசிகாண்ட புராண படன உரையாசிரியராக விளங்கிய இவரின் பணியைப் பாராட்டியே இந்தக் கௌரவிப்பு நடைபெற்றது.(க-28)

## சமய சந்நிதி

சுழிபுரம்,டிசெ.17

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள ஆலய வைகுண்ட ஏகாதசி மஹோற்சவ கொடியேற்ற வைபவம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது. எதிர்வரும் 26ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

அடியார்கள் ஏகாதசி தினத்தன்று இரவு வெளிவீதி பிரதட்சணம் செய்வதற்கு அனுமதி கிடைத்துள்ளதாக பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (க-28)

# நாய்களுக்கான தடுப்பு மருந்துகள் இங்கு எடுத்து வருவதில் தாமதம்

யாழ்ப்பாணம்,டிசெ.17

நாய்களுக்கு ஏற்றப்படும் நோய்த் தடுப்பு மருந்துகளுக்கு குடாநாட்டில் தட்டுப்பாடு நிலவுவதால் வளர்ப்பு நாய்களுக்கு நோய்கள் பரவும் நிலை ஏற்பட்டுள்ளதாக கால்நடை வைத்திய அதிகாரிகள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

இந்த மருந்து வகைகளை கொழும்பில் இருந்து எடுத்துவருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் -

இதனால் பிரதேச ரீதியாக வளர்ப்பு நாய்களுக்கு நோய்த்தடுப்பு ஊசி ஏற்றிவரும் திட்டத்தைக் கைவிட வேண்டி உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதனால் நோய்வாய்ப்படும் நாய்கள் மூலம் மனிதர்களுக்கும் ஆபத்து ஏற்படலாம் என்றும் எச்சரிக்கப்படுகிறது. (க-6-180)

### யாழ். மண்ணில் தங்கியிருந்து

# உயிரைப் பணயம் வைத்து மக்களுக்கு பணியாற்றுவேன்!

## கொழும்பு புறப்படும் முன் சிவாஜிலிங்கம்

வடமராட்சி,டிசெ.17

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க உயிரைப் பணயம் வைத்து எனது பணிகளைத் தொடருவேன்.

தமிழ்த் தேசிய ஒற்றுமை முன்னணியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கம் வடமராட்சியில் தனக்கு ஆதரவு வழங்கிய மக்களிடம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தம்மீது முழு நம்பிக்கை வைத்து இரவு பகல் பாராது பாடுபட்டு எம்மை நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்துள்ளீர்கள். உங்களின் நம்பிக்கையை நாம் பாதுகாப்போம்.

வடமராட்சிப் பிரதேசத்துக்கு 18 வருடகால இடைவெளிக்குப் பின்னர் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைத்துள்ளது. இப்பிரதேசத்தில் கடற்றொழிலுக்கு இருந்து வரும் இடையூறுகளைக் களைந்தெறிய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம் - என்றார்.

சிவாஜிலிங்கம் மேலதிக சிகிச்சை பெறுவதற்கு கொழும்பு புறப்படுவதற்கு முன்னர் திருக்குடும்ப கன்னியர்மட வைத்தியசாலை அம்புலன்ஸில் வடமராட்சிப் பிரதேசத்தின் பல பகுதிகளுக்கும் சென்று 'ஸ்ரெச்சரில்' இருந்தவாறே மக்களைச் சந்தித்தார். (க-173)

## நாளை

மார்கழி 03
செவ்வாய்க்கிழமை
திதி : சதுர்த்தி
வைகறை 5.54 வரை.
நட்சத்திரம்: உத்தராடம்
காலை 7.18 வரை.
சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 10.53 - 12.23
ராகுகாலம் : 3.23 - 4.53
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

எதைச் செய்தாலும் ஆர்வத்துடன் அனுபவித்து முழு விருப்பத்துடன் செய்யுங்கள் - இளமை உங்கள் கூடவே விலகாமல் இருக்கும்.

### மக்கள் வங்கியின் 'வனிதா வாசனா'

# அதிர்ஷ்ட சீட்டிழுப்பாக வாடிக்கையாளருக்கு அறிமுகம்

யாழ்ப்பாணம்,டிசெ.17

மக்கள் வங்கி மகளிருக்கான 'வனிதா வாசனா' என்ற விசேட சேமிப்புத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இது ஓர் அதிர்ஷ்ட சீட்டிழுப்பாகவும் வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப் படுத்தப்படுகிறது.

இச்சேமிப்புக் கணக்கினை 500 ரூபாவுடன் ஆரம்பிக்கமுடியும். 18 வயதிற்கு மேற்பட்ட பெண்களே இக்கணக்கினை ஆரம்பிக்கமுடியும். சொத்துக்களை வாங்கவும், திருமணஞ்செய்யவும், வீடு கட்டவும், பிள்ளைகளுக்கான கல்விக்கும் மற்றும் சொந்தமாக வியாபார முயற்சியை ஆரம்பித்தல் போன்றவற்றுக்கு பொருத்துமான கடன் வசதிகளை இதன் மூலம் பெற்றுக் கொள்ளமுடியும்.

இதன் மூலம் 300 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆயுட்காப்புறுதியையும் பெற்றுக்கொள்ளமுடியும். அதற்காக 12 மாதங்களுக்கு ஆகக் குறைந்த தொகையான 25 ஆயிரம் ரூபா வைப்பிலிருக்கவேண்டும்.

'வனிதா வாசனா' சீட்டிழுப்பில் கலந்துகொள்ளவேண்டுமாயின் ஒரு வருடைய கணக்கில் நவம்பர், டிசெம்பர், ஜனவரி ஆகிய மாதங்களில் மாதாந்தம் குறைந்தது 7500 ரூபா வைப்பில் இருக்கவேண்டும். ஒவ்வொரு 7500 ரூபாவும் ஒருவருடைய வெற்றி வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்யும்.

சீட்டிழுப்பு அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் நடைபெற உள்ளதால், புதிய சேமிப்புக் கணக்கினை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னதாக ஆரம்பிக்கமுடியும் என வங்கி உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சீட்டிழுப்பில் முதலாம் பரிசாக புத்தம் புதிய மாருதி காரும், 2ஆம் பரிசாக 24 இரட்டைக் கதவு குளிர் சாதனப் பெட்டிகளும், 3ஆம் பரிசாக 24 நுண் அலை ஓவன்களும், 4ஆம் பரிசாக 240 தங்க நாணயங்களும் வழங்கப்படவுள்ளன.

(க-9-180)

பயன்கருதாப் பெருந்தகைகளை

# நன்றியுடன் வாழ்த்துகின்றோம்

கொக்குவில் மேற்கு, கல்திட்டி,

**ஸ்ரீ ஞானவைரவர் ஆலய**

புனரமைப்புத் திருப்பணிக்காக இரண்டரை லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்து, அதில் முதற்கட்டமாக ஒன்றேகால் லட்ச ரூபாவை உடனடியாக வழங்கி உதவியமைக்காக,



ஈ.பி.டி.பியின்
செயலாளர் நாயகமும்
முன்னாள் அமைச்சருமான
உயர்திரு.
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும் -



ஈ.பி.டி.பியின்
யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளர்
உயர்திரு.
**K.V.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும் -



ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளரும்
நல்லூர் பிரதேச சபைத் தலைவருமான
உயர்திரு.
**K.மணிபல்லவராஜன் (நிஷாந்தன்)**
அவர்களையும் -

நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*கல்திட்டி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (96024)

**ஸ்ரீ ஞானவைரவர் ஆலய பரிபாலன சபை.**


# முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1993 . 04 . 14

உதிர்வு 2000 . 12 . 18

## அமரர் செல்வநாயகம் நிலான்

எம் குடும்பத்தின் கடைக் குட்டியே!
எம்மை விட்டு நீ எங்கேயடா சென்றாய்?
விழிநீர் வழிந்தோட வெதும்புகின்றோம் நாம் இங்கே!
ஏழரை வயதினிலே எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
நீ எங்கேயடா சென்றாய்?
எம் கண்களில் வழிந்தோடும் கண்ணீர்த்துளிகளைக் காணாமலா
நீ பறந்து சென்றாய்?

**உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.**

நிரந்தர முகவரி:
*நுணாவில் மத்தி,*
*சாவகச்சேரி.*

தற்போதைய முகவரி:
*"பவள வாசா"*
*ஆனைக்கோட்டை.* (96021)

உன் பிரிவால் துயருறும்:
அன்பு அப்பா, அம்மா,
அக்கா, அண்ணா.

# கண்ணீர் அஞ்சலி

எமது றோட்டறிக் கழகத்தின் சமூகசேவை இயக்குநரும்
மானிப்பாய், சுகாதார வைத்திய அதிகாரியுமான
Dr.க.கணேஸ்வரராஜா
அவர்களின் அன்புத் தந்தையார்

## கந்தப்பு கந்தசாமி

*(இளைப்பாறிய உத்தியோகத்தர், துறைமுக அதிகாரசபை)*

அவர்களது மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து, ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

**- யாழ்.றோட்டறிக் கழகத்தினர்.**

(C/19786)

# துயர் பகிர்கின்றோம்

எங்கள் கழக அங்கத்தவரும் நிலைய உறுப்பினருமான
மு.சுரேஷ்வரன் அவர்களின் அன்புத் தந்தையார்

## நாகலிங்கம் முருகவேள்

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருடன் நாமும் துயர் பகிர்ந்து அனுதாபம் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கோப்பாய் வடக்கு,*
*கோப்பாய்.* (96015)

சிறி சபாபதி நாவலர் வி.க.,
சிறி சபாபதி நாவலர் ச.ச.நி.

## கூட்டுறவுச் சங்க இடமாற்றங்கள் குறித்து கோரிக்கை

குருநகர்,டிசெ.17

யாழ். பல நோ.கூ.சங்கக் கிளைகளில் அதிக வருடங்கள் தொடர்ந்து கிளை முகாமையாளர்களாகக் கடமை புரிபவர்களை வேறுகிளைகளுக்கு மாற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று நேற்றுமுன்தினம் யாழ்.பல நோ.கூ.சங்க நடுவகப் பணிமனையில் நடைபெற்ற வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட சில கிளைகளின் பொதுச் சபை உறுப்பினர்கள் ஆலோசனையை முன்வைத்தனர்.

இப்பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. (ஒ-51)

## உதைபந்தாட்டம்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்டக்கிளையின் ஏற்பாட்டில் ஆசிரியர்களுக்காக யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டப் போட்டியில் நாளை செவ்வாய் மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நல்லூர்க் கல்விக் கோட்டமும் சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டமும் மோதுகின்றன.(ஒ-3)

## மூளைக் காய்ச்சலால் மூன்று வயதுச் சிறுமி உயிரிழப்பு!

தென்மராட்சி,டிசெ.17

மூளைக் காய்ச்சலுக்கு மூன்று வயதுப் பாலகி உயிரிழந்த சம்பவம் கடந்த செவ்வாய இடம்பெற்றது.

துன்னாலை, கலிகைச் சந்தியைச் சேர்ந்த புஷ்பராசா நிலக்ஸி (வயது 3) என்ற பாலகியே பலியானவராவார்.

மழையில் நனைந்ததால் காய்ச்சல் ஏற்பட்டு, ஒரு வாரகாலமாகத் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்ததாகவும் -

காய்ச்சல் அதிகரித்து, வலிப்பு ஏற்பட்ட பின்னர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிறிது நேரத்தில் சிறுமி மரணமானதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## பசுவும் கன்றும் ஏலத்தில் விற்பனை

தென்மராட்சி,டிசெ.17

நான்கு மாதங்களுக்கு முன்னர் கடத்திவரப்பட்டபோது கொடிகாமம் பொலீஸாரால் பிடிக்கப்பட்டு, சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட பசுமாடு ஒன்று இதுவரை எவரும் உரிமை கோராததால் எதிர்வரும் 26ஆம் திகதி சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளதாக நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

சமீபத்தில் பசுமாடு ஈன்ற கன்றுக்குட்டியும் சேர்த்து விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## அகதிமுகாம் மலசலகூடங்கள் திருத்தப்படுகின்றன

தென்மராட்சி,டிசெ.17

வடமராட்சி தெற்கு - மேற்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் உள்ள மலசலகூடங்கள் பிரதேச சபையினால திருத்தம் செய்யப்பட்டு வருகின்றன.

வடக்குப் புனர்வாழ்வு மீள்குடியமர்வு அதிகார சபையினால் வழங்கப்பட்ட நிதி உதவியுடன் பிரதேசத்தில் உள்ள 27 நலன்புரி நிலையங்களின் மலகூடங்கள் புனரமைக்கப்பட்டு வருவதாக பிரதேச சபைத் தலைவர் த.யோகராசா தெரிவித்தார்.

அண்மையில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் உள்ள பல மலகூடங்கள் பாழடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(க-117)

## கட்டுரைப் போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறை,டிசெ.17

சர்வதேச வலது குறைந்தோர் தினத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையினால் ஊர்காவற்றுறைக் கல்விக்கோட்டப் பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் பெயர், விவரம் முறையே வருமாறு:-

ம.மகாதரன் (ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி), அ.பமிலா (நாரந்தனை றோ.க.ம.வி.), ஜெ.யோசவ் கிறிசேந்திரா (ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி). (க-7-16)

# மரண அறிவித்தல்கள்

## இரத்தினம் விக்கினேஸ்வரி (மாலா)

(டச்சு றோட், சாவகச்சேரி)

டச்சு றோட், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் விக்கினேஸ்வரி (மாலா) நேற்று (16.12.2001) ஞாயிற்றுக்கிழமை சுவிஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் இரத்தினம் மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் குணரத்தினம் (சுவிஸ்), காலஞ்சென்ற குணேஸ்வரி மற்றும் சண்முகரட்ணம் (சுவிஸ்), ஜீவரட்ணம் (சுவிஸ்), ஜெயரட்ணம் (கொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கருணாவதி (லோகா - சுவிஸ்), தர்மரத்தினம் (சுவிஸ்), சாந்தி (சுவிஸ்), நாகநந்தினி (கொலண்ட்) ஆகியோரின் மைத்துனியும் ராகுலனின் அத்தையும், துவாரகாவின் சித்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ஆ.கந்தசாமி** (ஆசிரியர் - மாமனார்)
**குடும்பத்தினர்**

*மூளாமலை வீதி,*
*மானிப்பாய்.* (96014)

## கந்தப்பு கந்தசாமி

(இளைப்பாறிய உத்தியோகத்தர், துறைமுக அதிகாரசபை)

காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும் கோணாவளை லேன், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு கந்தசாமி நேற்று (16.12.2001) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு - சந்தனத்தின் அன்பு மகனும் பாலமணியின் அன்புக் கணவரும் தங்கேஸ்வரி, தவமணி, Dr.கணேஸ்வரராஜா (சுகாதார வைத்திய அதிகாரி, மானிப்பாய்), மகேஸ்வரி, அங்கயற்கண்ணி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவப்பிரகாசம், இராமச்சந்திரன், ஜெயமதி, சிவகுமார், ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2001) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr.கணேஸ்வரராஜா
(மகன்)

*கோணாவளை லேன்,*
*திருநெல்வேலி.* (96019)

## சின்னத்தம்பி கந்தையா

**(மல்லாகம் கந்தையா; தேநீர்க்கடை, கொடிகாமம்)**

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் கொடிகாமம், பெரிய நாவலடியை வசிப்பிடமாகவும் கொண்ட 'மல்லாகம் கந்தையா' என்று அழைக்கப்படும் சின்னத்தம்பி கந்தையா நேற்று (16-12-2001) ஞாயிற்றுக்கிழமை கல்வியங்காட்டில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதியினரின் மூத்த மகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் (ஞானம்) மற்றும் சிவநேசசுந்தரராணி, சிவயோகராணி, சிவநேசராணி (யா/கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம்), சிவயோகராசா (கனடா), சிவசுதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சின்னராசா (முரசுமோட்டை), குலச்சந்திரன் (ஊழியர், சாவகச்சேரி பிரதேச சபை) ஆகியோரின் மாமனாரும் கௌதமன் (யா/இந்துக் கல்லூரி), கௌதமி (யா/இந்து மகளிர் கல்லூரி), கௌசிகன் (யா/றோ.க.பாடசாலை), கௌசிகா ஆகியோரின் நேசப் பேரனும் காலஞ்சென்ற திரேசம்மா மற்றும் அருளப்பு, சின்னராசா, பிலோமினா, காலஞ்சென்ற மரியதாஸ் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2001) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவபாக்கியம் (மனைவி),
பிள்ளைகள்.

*3ஆம் கட்டை,*
*ஞானபாஸ்கரோதயா வீதி,*
*கல்வியங்காடு.* (96022)

## சின்னத்தம்பி கந்தையா

(மீசாலை)

மீசாலை வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி கந்தையா 15.12.2001 சனிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் சிவமலரின் அன்புக் கணவரும் சியந்தன் (இந்தியா), துர்க்கா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்போதைய முகவரி:
*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.* (96020)

தகவல்:
மனைவி.

## திருமதி முருகேசு சிவகாமிப்பிள்ளை

சாவகச்சேரி வடக்கு, கிராம்புவிலைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு சிவகாமிப்பிள்ளை அவர்கள் நேற்று (16.12.2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் முருகேசுவின் அன்பு மனைவியும் இராஜேஸ்வரி, கனகசிங்கம் (வர்த்தகர் - சந்தை உட்புறம், சாவகச்சேரி), சிவசுப்பிரமணியம் (மக்கள் வங்கி - கன்னாதிட்டி), விமலேஸ்வரி (ஆசிரியை, சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை; தற்காலிக இணைப்பு சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோகேசுவரி, பராசக்தி, பாலச்சந்திரன் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2001) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தற்காலிக வசிப்பிட இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.கனகசிங்கம் (வர்த்தகர்),
மு.சிவசுப்பிரமணியம்
(மக்கள் வங்கி, கன்னாதிட்டி),
ந.பாலச்சந்திரன்
(ஆசிரியர், சா/இந்து கல்லூரி).

*தற்காலிக முகவரி:*
*இல.189, ஆடியபாத வீதி,*
*திருநெல்வேலி.*
(96026)

# கிழக்கில் வாக்களிப்புத் தடை மூலம் மக்களின் ஜனநாயக உரிமை பறிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்களை வாக்களிக்க விடாது படையினர் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். ஆட்சியிலிருந்தவர்களில் சர்வாதிகாரத்தின் விஸ்வரூபத்தை அது நன்கு வெளிக்காட்டியுள்ளது.

அதேசமயம் - ஒட்டுமொத்தமாக தமிழினத்தைப் புலிகள் என்று சாயம் பூசி, தமிழினத்தை அழிக்கும் ஒரு சூழ்ச்சித்திட்டமும் இதில் புலப்படுவதாக எண்ணத் தோன்றுகின்றது.

தேர்தல் பிரசாரத்தின்போது தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றும் ஆதரவு திரட்டினர்.

அரச படையினரின் பல்வேறு அடக்குமுறைக்குள்ளும், சோதனைக் கெடுபிடிக்குள்ளும் சிக்கித் தவிக்கிறார்கள் படுவான்கரை மக்கள். தமிழ்க் கட்சிக் கூட்டமைப்புக்கு வாக்களித்து, தமிழ்ப் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றும் நோக்கம் கொண்டவர்கள் அவர்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தை வலிமைப்படுத்த தமிழ்க் கட்சிக் கூட்டமைப்புக்கே தமது ஆதரவை வழங்கக் காத்திருந்தனர். அவ்வேளையில் திட்டமிடப்பட்ட முறையில் தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டிருக்கிறது.

எந்தவொரு ஜனநாயக நாட்டிலும், எந்தவொரு மனிதனுக்கும் வாக்களிக்கும் அடிப்படை உரிமை இருக்கின்றது. ஆனால் வடக்குக் கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு அவ்வுரிமை பறிக்கப்பட்டிருக்கின்றது. சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்ல வேண்டிய முக்கிய பிரச்சினை இதுவாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சுமார் 70 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கின்றார்கள். இவர்களில் 99 சதவீதமானவர்கள் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும் என்ற உணர்வு மிக்கவர்கள். தேர்தல் தினத்தன்று படையினரின் சோதனைச் சாவடி நோக்கி இந்த மக்கள் திரண்டு வந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேச மக்கள் மாங்கேணிக்கு வந்தபோது அங்கே உள்ள படையினர் நீங்கள் வாக்களிக்க முடியாது எனத் தடுத்துநிறுத்தியுள்ளனர்.

எனினும் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு வேட்பாளரான அழகு சத்தியநாதன் தலையிட்டு சுமார் 500 பேர் வரை வாக்களிப்பதற்கு வசதி செய்தார் என்று தெரிவிக்கப்பட்டது. ஏனைய மக்களை வாக்களிக்கப் படையினர் அனுமதிக்கவில்லை. இதனால் சுமார் 8 ஆயிரம் வாகரை மக்கள் வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

செங்கலடி பதுளை வீதியில் வசிக்கும் சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் செங்கலடி கறுப்புப் பாலச் சோதனைச் சாவடி ஊடாக வந்தபோது படையினர் அவர்களை வாக்களிக்க விடாது திருப்பியனுப்பினர்.

"எப்படியாவது எமது வாக்குரிமையை வழங்க வேண்டும்" என்று மக்கள் கேட்டபோதும் அதற்குப் படையினர் இணங்கவில்லை.

பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளரும், முன்னாள் பிரதியமைச்சருமான சோ.கணேசமூர்த்தியின் பிறந்த இடம் பழுகாமம் போரதீவுப் பகுதியாகும்.

அவருடைய ஆதரவாளர்கள் பட்டிருப்புப் பால சோதனைச் சாவடி ஊடாக வந்து வாக்களிக்க சிறிது நேரமே அனுமதிக்கப்பட்டனர்.

தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு வேட்பாளரான வெள்ளிமலை என அழைக்கப்படும் ஞா.கிருஷ்ணபிள்ளை இது விடயத்தில் எடுத்த முயற்சி பலிக்கவில்லை. படையினர் உத்தரவை மீறி மக்கள் பட்டிருப்புச் சோதனைச் சாவடி ஊடாக வாக்களிக்க வந்தபோது எறிகணைத் தாக்குதல் நடத்தித் தடுத்து நிறுத்தப்பட்டனர். கல், தடி ஆகியனவும் மக்கள் கூட்டம் மீது வீசி எறியப்பட்டன. இதனால் வாக்களிக்க வந்த பலருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்று வவுணதீவு, கிரான் பாலத்தடி வீதி, வந்தாறுமூலை உப்போடை வீதி, சித்தாண்டி சந்தனமடு வீதி ஆகிய பாதைகள் ஊடாக வாக்களிக்க வந்த மக்களையும் படையினர் அனுமதிக்கவில்லை.

மக்களோடு மக்களாக ஊடுருவி, புலிகள் தாக்குதல் நடத்துவார்கள் என்ற தகவல் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்திருந்தமையால் அங்கு தடை விதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உண்மையில் தமிழர் கூட்டமைப்பு பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றிபெறக் கூடாது பொதுஜன ஐக்கிய முன்னணியில் ஒரு பிரதிநிதியாவது வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த வழிமறிப்பு நாடகம் நடந்திருக்கிறது.

"படையினரின் கட்டுப்பாடு இல்லாத பகுதிகளைச் சேர்ந்த மக்கள் வாக்களித்திருந்தால் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐ.தே.க. ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியிருக்கும்."

- இவ்வாறு ஐ.தே.க. வேட்பாளர் அலிசாஹிர் மௌலானா குற்றஞ்சாட்டியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்களை வாக்களிக்காது தடுத்தமையினால், மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடாத் தொகுதியில் இருந்து வரவேண்டிய ஒரு தமிழ் பிரதிநிதித்துவம் பறிபோயுள்ளது.

இது படையினரும் பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர்கள் சிலரும் திட்டமிட்டு மேற்கொண்ட நடவடிக்கை என்று புகார் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா தொகுதியில் இருந்து 2000 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட காலஞ்சென்ற நிமலன் சௌந்தரநாயகம் அமோக வாக்குகளால் வெற்றி பெற்றார்.

துரதிஷ்டவசமாக அவர் நாடாளுமன்றம் செல்வதற்கு முன்னமே காலன் அவர் உயிரைப் பறித்துவிட்டான். இதனையடுத்து அவரது மனைவி திருமதி நிமலன் சௌந்தரநாயகத்தை நாடாளுமன்ற உறுப்பினராக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி பலிக்கவில்லை. பொன்.செல்வராசா உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

மட்டக்களப்பு பட்டிருப்புத் தொகுதியில் நடைபெற்ற நிதி ஒதுக்கீடு, அபிவிருத்திகள் போன்று கல்குடாத் தொகுதிக்கு குறிப்பிடத்தக்களவு ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதே இப்பிரதேச மக்களின் ஆதங்கமாகும்.

இதனை நிவர்த்திக்கும் வகையில் இம்முறை கல்குடாத் தொகுதியில் இருந்து தமிழர் கூட்டமைப்பின் சார்பாக - வாகரையைச் சேர்ந்த - கல்வி அதிகாரியான அழகு சுப்பிரமணியம், சத்தியநாதன், கிரானைச் சேர்ந்த சின்னத்தம்பி குமரகுரு ஆகிய இருவரும் தேர்தலில் நிறுத்தப்பட்டனர்.

இருவரில் ஒருவர் எப்படியாவது கல்குடாத் தொகுதியில் இருந்து தெரிவு செய்யப்படுவார் என்ற நம்பிக்கை இப்பகுதி மக்களிடையே வேரூன்றியிருந்தது.

எனினும் படையினரின் திட்டமிடப்பட்ட வாக்குரிமை பறிப்பினால் வாகரைப் பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 8 ஆயிரம வாக்குகள் தடுக்கப்பட்டன. கிரான், திகிலிவட்டை, பூலாக்காடு ஓடும்பலைப் பகுதியை உள்ளிட்ட 3 ஆயிரம் வாக்குகளும் வீணாகிப் போய்விட்டன.

ஏறாவூர் பற்று பிரதேசத்துக்குட்பட்ட கரடியனாறு, கித்துல்வெவ, இலுப்பையடிச் சேனை, பன்குடாவெளி, கொடுவாமடு, தம்பாளம்வெளி ஆகிய பகுதி மக்களும் வாக்களிக்க முடியவில்லை. இதனால் சுமார் 5 ஆயிரம் வாக்குகள் பறிக்கப்பட்டன.

கல்குடாத் தமிழ் மக்களுக்கு ஓர் உறுப்பினர் கிடைக்கவில்லை.

☆

(நன்றி- சுடர் ஒளி)




மானிப்பாய் லயன்ஸ் கழகம் சுகாதாரத் தினத்தையொட்டித் தென்னிந்தியத் திருச்சபையுடன் இணைந்து இணுவில் லயன்ஸ்கழக அனுசரணையுடன் இணுவில் மக்கிலியட் வைத்தியசாலையில் நடத்திய வைத் திய முகாமில் வைத்திய கலாநிதி ஜி.பவானி வைத்திய பரிசோதனை மேற்கொள்வதைப் படத்தில் காணலாம்.

லயன்ஸ் கழக பிராந்திய இணைப்பாளர் எஸ்.எஸ்.தங்கராஜா, இணுவில் லயன்ஸ் கழகத் தலைவர் ரி.கைலாசநாதன், தென்னிந்தியத் திருச்சபை நிர்வாக அதிகாரி எஸ்.இராசநாயகம் உட்பட லயன்ஸ்கழக உறுப்பினர்களும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்: வலி.தெற்கு செய்தியாளர்)*

## புதிய அரசின் முதல் 'பட்ஜெட்' மார்ச்சில்

புதிய அரசின் முதலாவது வரவு - செலவுத்திட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்படும்.

கிராமியப் பொருளாதார அமைச்சரும், பிரதி நிதி அமைச்சருமான பந்துல குணவர்த்தன இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 31 ஆம் திகதிக்குப் பின் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க பணம் ஒதுக்கப்படவில்லை, இதனால் அதற்கு முன் இடைக்கால 'பட்ஜெட்' நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

- என்றும் அமைச்சர் குணவர்த்தன தெரிவித்துள்ளார். (ஐ)

## மட்டுவிலில் திருவெம்பாவை உற்சவம்

ஷெல்வீச்சுக்களால் சேதமடைந்து புனரமைக்கப்பட்ட மட்டுவில் தெற்கு மருதங்குளம் வைரவர் ஆலயத்தில் இம் முறை திருவெம்பாவை உற்சவம் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.(ஐ-117)

## சமூக நலத்துறை திணைக்களமே இனி முதியோர் அ.அட்டைகளை வழங்கும்

யாழ்ப்பாணம்,டிசெ.17

65வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான முதியோர் அடையாள அட்டைகள் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் வடக்கு - கிழக்கு மாகாண சமூக நலத்துறைத் திணைக்களத்தினாலேயே வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்களே தமது பிரிவில் உள்ள முதியவர்களுக்கு மாகாண சமூக நலத்துறைத் திணைக்களத்தின் பணிப்புரையின் கீழ் அடையாள அட்டைகளை வழங்கிவந்தனர்.

புதிய நடைமுறையின்படி மேற்படி அடையாள அட்டை பெறவிரும்புவோர் தத்தமது கிராம அலுவலர்களிடம் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று, பிரதேச செயலரின் உறுதிப்படுத்தலுடன் வடக்கு - கிழக்கு மாகாண சமூக நலத்துறை திணைக்களத்துக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவேண்டும்.

இந்த அடையாள அட்டையைக் காண்பிப்பதன் மூலம் முதியோர் சுகாதார சேவைகள், போக்குவரத்து வசதிகள், தபாலும் ஓய்வூதியமும், வங்கிச் சேவைகள், பொலீஸ், நீதி ஆலோசனைகள் ஆகியவற்றில் முன்னுரிமை பெற முடியும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க-7-16)

## பொலீஸ் உயர் பதவிகளில் விரைவில் மாற்றம் வரும்

### பெரும் தலைகள் உருளலாம்

பொலீஸ் திணைக்கள உயர் பதவிகளுக்கு ஓரிரு வாரங்களில் புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதிப் பொலீஸ் மா அதிபர்கள், சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர்கள், உதவிப் பொலீஸ் அத்தியட்சகர்கள், பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் ஆகிய பதவிகளுக்கு நியமிக்கப்பட விருப்போரின் பெயர்கள் திரட்டப்பட்டு வருகின்றன என்று பொலீஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் பழைய பெருந்தலைகள் சில உருளலாம்.

பிரதமரின் பாதுகாப்புப் பிரிவு, உளவுப்பிரிவு, பிராந்திய பொலீஸ் பிரிவுகள் ஆகியவற்றின் உயர் பதவிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் எனத் தெரிகிறது.

கடந்த அரசாங்கக் காலத்தில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளான சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர்கள் பலருக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படலாம் எனவும் தெரிகிறது.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மேரி திரேசா அந்தோனிப்பிள்ளை

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் தற்போது 20/5, றக்கா லேன், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி திரேசா அந்தோனிப்பிள்ளை 15.12.2001 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கலஞ்சென்ற சவரிமுத்து அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும் தாசியுஸ் மரியசெல்வம் (சுவிஸ்), மேரி கலீஸ்ரா (சுவிஸ்), மேரிஜோசப்பின் (செல்வம்), மேரி வினிபிறீடா (பிரான்ஸ்), மேரி ஸ்கொலஸ்ரிக்கா (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயமணி (சுவிஸ்), அன்ரன் சிவஞானமூர்த்தி (சுவிஸ்), மரியதாஸ் (இன்பம்), மரியநேசன் (பிரான்ஸ்), ஜெயசீலன் (டென்மார்க்) ஆகியோரின் மாமியும் எவோன், அபிற்றா, கமில்ரன், திவியா, டெல்பின்ரா, ஸ்ரெபாணி, எர்வின் லவ்னியா, ரியூலிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.12.2001) திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து யா/புனித சஞ்சுவானியார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யா/புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*20/5, றக்கா லேன்,*
*யாழ்ப்பாணம்.*
***T.P. - 3344.*** (96027)

தகவல்:
மேரி யோசப்பின் (மகள்),
இன்பம் மரியதாஸ் (மருமகன்).

### மகாலிங்கம் துளசிதாசன்

உடுவிலைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 10ஆம் ஆண்டு மாணவனுமாகிய மகாலிங்கம் துளசிதாசன் நேற்றுமுன்தினம் (15.12.2001) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் உடுவில் ஐயாத்துரை மகாலிங்கம் (சுவிஸ்) - பத்மாதேவி ஆகியோரின் அன்பு மகனும், ஜெகசொரூபிணி, ரூபிணி ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மான்ஸ் பாடசாலை வீதி,*
*கொட்டடி, உடுவில்,*
*சுன்னாகம்.* (96025)

தகவல்:
ம.பத்மாதேவி
(தாய்)

## கண்ணீர் அஞ்சலி

### நாகலிங்கம் முருகவேள்

*(முன்னாள் லிகிதர், வலி. கிழக்கு தென்பகுதி பல நோ. கூ. சங்கம் – நீர்வேலி)*

அவர்கள் 14.12.2001 இல் அமரத்துவமடைந்ததையிட்டு எமது அஞ்சலியைச் செலுத்துவதோடு அவரின் இழப்பால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பணிப்பாளர்கள், பணியாளர்கள்,**
(96023) **வலி.கிழக்கு தென்பகுதி பல நோ.கூ.சங்கம், நீர்வேலி.**

நிறஞ்சனாஸ்
சங்கானை
புதிய வெளியீடு
அஜித். தேவயானி, பார்த்தீபன் நடித்த
நீ வருவாய் என
(ரீல்ஸ்)
சிறந்த பாடல்கள் நிறைந்த படம்
காட்சிகள்: 11.00, 2.30, 5.30
(C/19779)

ராஜா யாழ்ப்பாணம்
ஐந்தாவது வாரமாக
கமல், மனீஷா மற்றும் பலர் நடித்த
ஆளவந்தான்
19 முதல்
குருசிஷ்யன்
தினசரி:- 10.30, 2.30 (புதிய நேரம்)
(C/19778)

நாகம்ஸ் சுன்னாகம்
பிரசாந்த், ஷாலினி, மணிவண்ணன நடித்த
பிரியாத வரம் வேண்டும்
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 3.00 (புதிய நேரம்)
(96017)

## இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில்
# இந்தியாவின் தயவை ரணில் நாடுவது
# புலிகளுக்கு சந்தேகத்தையே ஏற்படுத்தும்!

கொழும்பு,டிசெ.17

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவின் தயவை நாடிச் செல்வதானது ஐக்கிய தேசியக்கட்சி அரசுமீது விடுதலைப் புலிகளுக்கு சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவே அமையும்.

தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப் புலிகள் கொண்டுள்ள நிலைப்பாடு, இந்திய அரசுக்கு திருப்தியானதாக இல்லை என்பது அனைவருக்கும் தெரிந்த நிலையில் - இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிற்குச் செல்வதானது ஐ.தே.க. அரசுமீது விடுதலைப் புலிகளுக்கு சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அமையும்.

கடந்த பல வருடங்களாக விடுதலைப் புலிகள் பற்றி இந்தியா திருப்தியான கருத்துக்களை வெளியிடவில்லை. இந்தியாவின் கல்விமான்கள் மற்றும் அரச பலம் மிக்கவர்கள் பலரும் விடுதலைப் புலிகளின் கோரிககைகளும், நடவடிக்கைகளும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியன என்று கூறுவதில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்படும் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுடன் நெருக்கமாகி, இனப்பிரச்சினையைத் தீர்க்க முயல்வது நம்பிக்கைக்குரிய - செயல் திறனான - நடவடிக்கையாகத் தெரியவில்லை.

ஐ.தே.க. அரசு இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அத்த ஆர்வம் கொள்ளவில்லை. இது தொடர்பாகத் தீர்க்கமான பார்வையும் அதனிடம் இல்லை. தமது பலத்தை அரசியல் ரீதியாக அதிகரித்துக் கொள்ளவே ஐ.தே.க. அரசு வெளிநாடுகள் பலவற்றுடன் பேசுவதற்கு முயல்கின்றது.

- இவ்வாறு ஜெகான் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-9)

# ரத்னசிறிக்கு நாடாளுமன்றத்தில் முதல் நாளிலேயே எதிர்ப்பு?

கொழும்பு,டிசெ.17

எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவுக்கு நாடாளுமன்றம் கூடும் முதல் நாளிலேயே எதிர்ப்புத் தெரிவிக்க இருக்கிறார்கள் பொதுஜன ஐக்கிய முன்னணி எம்.பிக்கள் சிலர்.

எதிர்வரும் 19ஆம் திகதி நாடாளுமன்றம் கூடுகிறது.

எதிர்க்கட்சித் தலைவராக முன்னாள் பிரதமரைத் தாம் ஏற்கப்போவதில்லை என்றும் அம்பாந்தோட்டை மாவட்ட எம்பிமஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலேயே தாம் இயங்கப் போவதாகவும் பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் சிலர் சபாநாயகரிடம் கடிதம் ஒன்றை கையளிக்கவிருக்கின்றனர்.

இதுவரை சிரேஷ்ட உறுப்பினர்கள் 47 பேர் இக்கடிதத்தில் கைச்சாத்திட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

கடந்த வாரம் எதிர்க்கட்சித் தலைவரை நியமிப்பது தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயற்குழுக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டது.

முன்னாள் அமைச்சர்களான டி.எம். ஜயரத்னவும், மஹிந்த ராஜபக்ஷவும் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிக்க விருப்பம் தெரிவித்தனர்.

யாரை எதிர்க்கட்சித் தலைவராக நியமிப்பது என்பதைத் தீர்மானிக்க வாக்கெடுப்பு நடத்துமாறு மஹிந்த ராஜபக்ஷ கோரினார். ஆனால் ஜனாதிபதி, முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவே எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்படுவார் என அறிவித்துவிட்டு கூட்டத்தைக் கலைத்து விட்டார்.

இதனால் அதிருப்தியுற்றவர்கள் நாடாளுமன்றத்தில் முதல் நாளிலேயே தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்கவுள்ளனர்.

இவர்கள் கோருகிறபடி காரியம் நடக்கவில்லையானால் இவர்கள் தனி (அதிருப்தியாளர்கள்) குழுவாக இயங்க முடிவெடுக்கலாம் என்று அறியவருகிறது.

# தேர்தலில் மக்கள் வழங்கிய தீர்ப்பு சமாதானத்திற்குக் கிடைத்த ஆணை

## சமாதான ஆதரவுக் குழு அறிக்கை

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் போருக்கு எதிராகவும் சமாதானத்திற்கு ஆதரவாகவும் மக்கள் அளித்த தீர்ப்பை நாம் வரவேற்கின்றோம் - என சமாதான ஆதரவுக குழுவின் அறிக்கை தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"சமாதான வேலைத்திட்டம் மீண்டும் உயிருட்டப்படுவதையும் - விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதனையும் - மககள் தீர்ப்பு போதுமான அளவுகுத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

இதேவேளை, இனப்பிரச்சினையின் தீர்வுபற்றிய அச்சம், சகியாமை, போரிலீடுபட வேண்டுமென்ற பிரசாரம் என்பனவற்றையும் மக்கள் நிராகரித்து விட்டனர். சமாதான நடவடிக்கைகளுக்கு மீண்டும் உயிருட்டப்பட வேண்டும். இதற்கே வடக்கு - கிழக்கின் மக்கள் வாக்களித்துள்ளனர். இதனால் நாம் சமாதானப் பணிகளைத் தொடரவேண்டும்.

இதன் முதற்படியாக, இரு பெரும் கட்சிகளும் தமக்குள் உள்ள அற்ப வேறுபாடுகள் அத்தனையையும் மறந்து ஒத்துழைக்க முன்வரவேண்டும். இது அவர்களின் விருப்பத் தேர்வாக இருத்தலாகாது. ஆனால் இன்றியமையாத தேவையாகும்.

புதிய அரசாங்கம் நோர்வேயின் அனுசரணையுடனான சமாதன முயற்சிகளை உடன் ஆரம்பிக்கவேண்டும். மக்கள் அளித்திருக்கும் இந்தத் தீர்ப்பை விடுதலைப் புலிகள் பற்றிக் கொள்ள வேண்டும். நியாயமானதும், நிரந்தரமானதுமான தீர்வொன்றிற்கான பேச்சுக்களை அரசாங்கத்துடன் நடத்துவதற்குப் புலிகள் முன்வர வேண்டும்.

சமாதானத்திற்கான எமது வேலைத திட்டத்திலும் ஏனைய அறிக்கைகளிலும், இரு தரப்பு யுத்தநிறுத்தம், பொருளாதாரத் தடை நீக்கம் என்பன சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு வேண்டிய முதற்படிகள் என்று தெரிவித்திருந்தோம். பரஸ்பரம் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள், புலிகளின் மீதான தடை நீக்கத்துக்கு வழிவிடக்கூடியவிதத்தில் தடையைத் தற்காலிகமாக நீக்குதல் என்பனவற்றை நிறைவேற்றி, பேச்சுகளுக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கவேண்டும்.

நாடு முக்கிய சந்திப்பொன்றில் நின்று கொண்டிருக்கிறது. நீதி, கௌரவம், சமத்துவம் என்பனவற்றின் அடிப்படையில் சமாதானத்தையும், பொருளாதர அபிவிருத்தியையும் ஏற்படுத்துவதற்கு இன்னுமொரு வாய்ப்புக்காக நாம் காத்திருக்க வேண்டியதில்லை." - என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 13 வேட்பாளர்கள் தலா ஒரு வாக்கு மட்டுமே பெற்றனர்

கொழும்பு,டிசெ.17

கடந்த தேர்தலில் மொனராகல மாவட்டத்தில் போட்டியிட்ட 128 வேட்பாளர்களில் 13 பேர் தலா ஒரேயொரு விருப்பு வாக்கை மட்டுமே பெற்றனர் எனறு தெரிவிக்கப்படுகின்றது. அதுவும் அவர்கள் தங்களுககுத் தாங்களே செலுத்திய விருப்புவாக்காக இருக்கக் கூடும்.

பத்து அரசியல் கட்சிகளும் 6 சுயேச்சைக் குழுக்களும் அங்கு போட்டியிட்டன.

போட்டியிட்ட வேட்பாளர்களில் 13 பேர் தலா ஒரு வாக்குகளையும் 70 பேர் தலா 10 விருப்பு வாக்குகளையும் மட்டுமே பெற்றனர். (ஐ-3)

## இந்தியத் தூதர் புதுடில்லி செல்கிறார்

இலங்கைக்கான இந்தியத்தூதர் கோபாலகிருஷ்ண காந்தி இவ்வார நடுப்பகுதியில் புதுடில்லி செல்லவுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் இந்தியாவில் மேற்கொள்ளவுள்ள விஜயம் தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிக்கவே தூதர் அங்கு செல்கிறார்.

இந்தியத் தலைவர்களுடன் புதிய பிரதமர் நடத்தும் பேச்சுக்களில் அவர் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## புனர்வாழ்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கு வாழ்த்துச் செய்திகளை அனுப்பியிருந்தன. எனினும் அந்த அமைப்புகளுடன் தொடர்புகொண்டு செயற்படப்போவதில்லை. மக்களுடன் தொடர்புகொண்டு அவர்களுக்காகவே பணிபுரியவே விரும்புகிறேன்.

அடிப்படை வசதிகள் இன்றி அல்லற்படும் அப்பாவி மக்களின் வாழக்கையை மேம்படுத்துவதே எனது முதற்பணியாக இருக்கும்.

யாழ்ப்பாணத்துக்கு வருவதற்கு, முன்னர் பல தடவைகள் முயற்சி எடுத்தேன். ஆனால் சந்திரிகா அரசு அதற்கு அனுமதிக்கவில்லை. எனினும் வன்னிக்கு எனது வாகனத்தில் சென்று அங்குள்ள மக்களுக்காகப் பணியாற்றினேன். மருத்துவ முகாமை நடத்தி மருத்துவ உதவிகளை வழங்கினேன் - என்று ஜயலத் தெரிவித்தார்.

நாளை காலை 10 மணிக்கு தனது அமைச்சுக்குச் சென்று பணிகளைப் பொறுப்பேற்க இருப்பதாகவும் அவர் கூறினார். (ஐ-3)

## புலிகளுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காண்பதே அரசின் நோக்கமாகும்.

மாற்று நடவடிக்கை மூலம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவே அரசு விரும்புகின்றது. இனப்பிரச்சினைத் தீர்விலேயே நாட்டின் பொருளாதாரம் தங்கியுள்ளது என்று டிரோன் பெர்னாண்டோ நேற்று ரூபவாஹினிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். (ஐ-3-9)

## தேர்தல் ஆணையாளருக்கு கண்காணிப்பாளர் பாராட்டு

கொழும்பு,டிசெ.17

"தேர்தல் வந்துவிட்டால் தேர்தல் ஆணையாளரே கதாநாயகன். இதனால் பலரின் கண்டனங்களுக்கும் ஆளாக வேண்டிய நிலை ஏற்பட்டு விடுவதுண்டு. தேர்தல் ஆணையாளரின் பொறுப்பும் அதிகமானது."

- இவ்வாறு தேர்தல் கண்காணிப்பாளரும் பத்திரிகையாளருமான சுனந்த தேசப்பிரிய கருத்து வெளியிட்டுள்ளார்.

"பொதுத் தேர்தலின்போது தேர்தல் ஆணையாளரிடம் பாரிய பொறுப்புச் சுமத்தப்பட்டது. அவர் பாரபட்சமாகச் செயற்படுகின்றார் என்று பொதுஜன ஐக்கிய முன்னணி குற்றஞ்சாட்டியது. ஆனால் தேர்தல் ஆணையாளர் பாரபட்சம் இன்றி நேர்மையாகச் செயற்பட்டுள்ளார்" என்று சுனந்த தேசப்பிரிய கூறினார். தேர்தல் கண்காணிப்பு அறிக்கையில் தேர்தல் ஆணையாளருக்குச் சாதகமான அம்சங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

## அமைச்சர் டிரோனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானத்தையும் விரும்பியே புதிய அரசாங்கத்தை அமைக்க வாக்களிததனர். ஆனால் வெளிவிவகார அமைச்சரின் கூற்று பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கும் இடையில் எந்த மாற்றமும் இல்லை என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டது. இது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தையே ஏற்படுத்தியுள்ளது - என்றார்.

### ஆனந்தசங்கரி

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினைக்கு சமாதானதீர்வு காண்பதற்கான உறுதிமொழியை வழங்கியுள்ளார். இச்சமயத்தில் வெளிவிவகார அமைச்சர் இப்படிக் கூறியிருப்பது வேதனைப்படக்கூடிய ஒன்று. நாடு சுமுக நிலைக்கு மீண்டும் திரும்புவதை விரும்பாதவர்கள் இப்படிக் பொறுப்பற்ற முறையில் பேசுகின்றனர் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் துணைத் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கூறினார்.

வெளிவிவகார அமைச்சின் பேச்சு தமிழ் மக்களின் நம்பிக்கையைச் சீர்குலைப்பதாக உள்ளது. புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டுப் பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும். இல்லையேல் பேச்சு இல்லை என்பது அரசியல் விவேகமற்ற பேச்சு - என்று புளொட் தலைவர் சித்தார்த்தன் தெரிவித்தார்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி கூறியதாவது:-

• அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்பதில் பிரதமர் ஆர்வம் கொண்டுள்ளார். இந்தச் சூழ்நிலையில் புதிய வெளிவிவகார அமைச்சரின் கருத்து குட்டையை மேலும் குழப்புவதொன்றாகும் - என்றார்.

### சந்திரசேகரன் கருத்து

முழு நாட்டையும் சீரழித்துக்கொண்டிருக்கும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு புதிய அரசாங்கம் முயற்சிகளை முன்னெடுக்கும் என்ற நம்பிக்கையுடனேயே அனைத்து தமிழ் மக்களும் புதிய அரசாங்கத்திற்கு ஆதரவளித்தனர்.

பேச்சுவார்த்தை என்பது அரசும் புலிகளும் ஆயுதங்களை கீழே வைத்து விட்டு யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்துவதன் மூலமே சாத்தியமாகும் என்ற கருத்தினை நீண்டகாலமாகவே பலரும் வலியுறுத்தி வந்துள்ளனர்.

புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்று வெளிநாட்டு அமைச்சர் கூறுவது "புலிகள் சரணடைய வேண்டும்" என்று கூறுவதாகவே அமைகிறது. இதனை எந்தப் போராட்ட அமைப்பும் ஏற்றுக்கொள்வதற்கு எவ்வித நியாயமும் இருக்க முடியாது.

இது அரசின் கருத்தா அல்லது அமைச்சரின் தனிப்பட்ட கருத்தா என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். இது தொடர்பாக தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு பிரதமருடன் பேசும் அதுவரை பொறுத்திருப்போம்.

- என்று மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்தார். (ஐ)

A/L PHYSICS
ஆசிரியர்:-
T.SHAN (B.Sc. Dip. in Ed.)
2002
ஓட்ட மின்னியல் இலத்திரனியல்
Mon. - 3.30 Tue. - 5.00
Paper Class - Thu. - 5.00
2003
அதிர்வுகளும் அலைவுகளும்
ஆரம்பம்: Mon. - 4.30
இடம்:
410, K.K.S. Road, JAffna.
(96011)

கணக்கீடு
S.தவா B.Com. (Hons) Acc.Spl.)
A/L 2003
கணக்கீட்டுச் சமன்பாடு
ஆரம்பம்: நாளை 1.30 p.m.
செவ்., வியாழன் 1.30 p.m.
"விடுமுறை காலத்தில்
இவ்வலகு முடிக்கப்படும்"
NEW SCIENCE COLLEGE
JAFFNA. (C19787)

ஸ்கிறீன் பிறின்டிங் வேலை
வண்ணப் படக்கலண்டர்களில் உங்கள் வியாபார விளம்பரம்,
திருமண அழைப்பிதழ் ஆகியவற்றுக்குக் கனனி எழுத்துக்களை
பட்டுத்துணி அச்சுப்பதிப்பு முறைமூலம் அச்சுப்பதித்திட
பிள்ளையார் அச்சகம் (Pvt.) Ltd.
676, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(முதல் வருபவருக்கு முன்னுரிமை அடிப்படையில் வேலைசெய்து தரப்படும்.)

CLOSING DOWN SALES
COST TO COST SALES!
COST TO COST SALES!
விற்றுத் தீர்த்தல்!!
சிறியோர் முதல் பெரியோர் வரை இருபாலாருக்குமான சகலவிதமான ரெடிமேட் புடைவை வகைகளும் 16.12.2001 ஞாயிறு தொடக்கம் 31.12.2001 திங்கள் வரை குறைந்த விலையில் விற்றுத் தீர்க்கப்படவுள்ளன.

☆பேபி சூட் ☆புறக் ☆பஞ்சாபி ☆சேட்
☆பேபி புறக் ☆ஸ்கேட் & பிளவுஸ் ☆சோளிகிற் ☆T.சேட்
மற்றும்
சாறிவகைகள் அனைத்தும்
சங்கமம் ரெக்ஸ்
54A, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம். (C-19776)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.12.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.